மேழிச்செல்வம்

மாத இதழ்



சோபகிருது௵ கார்த்திகை௴

MADRAS RECORD OFFICE
19 DEC 1963
MADRAS
842(P)

பூத்துக் குலுங்கும் "ஸீ ஐலண்டு ஆண்ட்ரூஸ்" நீண்ட இழைப் பருத்தி

கோவை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் வளர்ந்துள்ள காட்சி

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1963-ம௵ நவம்பர்-டிசம்பர்௴

விவசாய பொறியியல் பட்டரையில் ஆயுத பூஜை திருநாள்.



ஆயுதபூஜை திருநாளன்று (17-11-63) வண்ணரப்பேட்டையில் உள்ள விவசாய பொறியியல் பட்டரையில் உள்துறை, விவசாய அமைச்சர் திரு பி. கக்கன் அவர்கள், பொறியியல் பட்டரையில் தயாரிக்கப்படும் இயந்திர சாதனங்களை பார்வையிடுகிறார்.



பட்டரை தொழிலாளர்களுக்கு அமைச்சர் உரைநிகழ்த்துகிறார். விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் மேடையில் காணலாம்.



வேளாண்மைத்துறை நெறியாளர் திரு பி. கார்த்திகேயன், I.A.S., அவர்கள் பேசுகிறார்.

உள்ளுறை

	பக்கம்
தரம் உயர்த்தி தனம் பெறுவீர்	5
கேழ்வரகு மகசூல் பெருக்க "சூப்பர் கம்போஸ்ட்" இடுங்கள் ..	6
ஸ்ரீவில்லிபுத்தூர் உகண்டா பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.	8
குறைந்த செலவில் அதிக குறுவை மகசூல் உற்பத்தி	10
உருளைக் கிழங்கு விளைச்சலில் முப்பெரும் வெற்றி எனக்கே	12
தென்னந்தோப்புகளில் வாழை ஓர் லாபகரமான ஊடுபயிர்	13
உருளைக்கிழங்கின் இலை கருகல் நோய்	14
நிலக்கடலையின் தேமல் நோய்	16
தமிழ்நாட்டில் பாக்கு மரங்களை தாக்கும் சில முக்கிய நோய்களும் அவைகளை தடுக்கும் முறையும்	18
கழிவை கம்போஸ்டாக்கு	20
கழனிக்குத் தழை இல்லை என்ற சொல் இல்லை	21
நாட்டு எரு அபிவிருத்தியில் ஆர்வம்	22
விவசாயச் செய்திக் கதிர்	23
எல்லாப் பருவங்களுக்கும் எற்ற "குறுகிய கால மொச்சை D.L. 3196" ..	24
1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை	26
மேழிச்செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்	27
ஆல் இண்டியா ரேடியோ திருச்சி வானொலி நிலையம்	28
விவசாயத்துறை செய்திகள்	30

விளம்பரங்கள் :

டாடா பைஸன் அண்ட் ராலீஸ்	4
கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ், ...	7
ராஜா பண்ணைத் தோட்டம்	9
ஜான்ஸ்டன் (வெர்டிகல் பம்புகள்)	11
ரங்கசாமி & Co.	15&19
கோத்தாரியன் சூப்பர் பாஸ்பேட்	17
ராலீஸ் இந்தியா	21
பொட்டாஷ்	25

உயிர்ச்சத்து நிறைந்த காய்கறிகளை ஊக்கத்துடன் பயிர் செய்யுங்கள்

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ் எங்கும் காணலாம்!

'' உ. பி., பிஹார் வங்காளம்... ''
என்றுர் டாடா. ''சென்னே, கேரளா, மைசூர்... ''
இடைசெறுகினுர் பைஸன்.
''மஹாராஷ்டிரம், குஜராத்'' என்று அவசரக்
குரலெழுப்பினுர் ராலி தம் பங்குக்குக் குறைவின்றி
'' வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கு–
நாம் ஒரே சமயத்தில் எங்குமிருப்போம் ''
எனறு இணேந்து முழங்கினர் மூவரும்.
'' விநியோகக் கலேயில் நாம் மன்னர்கள்தாம்.''

டாடா-பைஸனும் ராலீஸும் தனித்தியங்கி வந்த தங்கள் விற்பனே நிறுவனங்களே இணேத்து ஒரே ஸ்தாபனமாக்கிவிட்டனர். இனி டாடா-பைஸன் தயாரிபபுகள் யாவற்றையும் ராலீஸின் '-பெர்டிலேஸர் அண்ட் பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன்' விற்பனேக்குக கொண்டுவரும். இவ்விணேப்பிஞல் இந்திய விவசாயிக்கு அளப்பரிய நன்மைகள் ஏற்படும். முதன்முறையாக நாடு பூராவும் பயிர் வளர்சசிக்கு மட்டுமின்றி, பயிர்ப் பாதுகாப்புக்கும் தேவையான ஆலோசனேகளும் தயாரிப்புகளும் இணேக்கப்படட ஒரே ஸ்தாபனத்தின் மூலம் கிட்டப் போகிறது. விவசாய முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க சேவை இது எனபதைக் கூறவும் வேண்டுமா?

TATA-FISON RALLIS

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது!



TFRY-4 TAM

மலர் 20 | சோபகிருது ஹு கார்த்திகைமீ —1963—நவம்பர்-டிசம்பர் | இதழ் 11

தரம் உயர்த்தி தனம் பெறுவீர்

(V. ஸ்ரீனிவாசன், உதவி வர்த்தக அலுவலர், சென்னை.)

நிலங்களில் உற்பத்தியாகும் விளைபொருள்களுக்கும், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கும் நிறையவித்தியாசம் உண்டு. தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பண்டங்களெல்லாம் எடையிலும், அளவிலும், குணத்திலும் ஒரே தன்மையுள்ளதாய் இருக்கும். அப்பொருள்களின் தன்மையை எந்த விகிதத்தில் மாற்ற வேண்டுமானாலும் மாற்ற முடியும். ஆனால் விவசாயப் பொருள்களின் தன்மை அப்படியல்ல. செடிகளுக்கு கிடைக்கக்கூடிய சத்துப் பொருள்களின் தன்மையும், அளவும் நிலத்துக்கு நிலம் மாறுபட்டிருக்கின்றன. இக்காரணங்களால் பயிர்களின் வளர்ச்சி ஒரு நிலத்திலிருப்பதுபோல் மற்றொரு நிலத்திலிருப்பதில்லை. இதனால் ஒரு நிலத்தில் விளையும் விளைபொருளின் தன்மை மற்றொரு நிலத்தில் விளைந்ததைவிட மாறுபட்டிருக்கிறது. மேலும் ஆங்காங்கே பெய்யும் மழை, பனி முதலிய வானிலை வேறுபாடுகளும் விளைச்சலைப் பாதிக்கின்றன. பூச்சிகளாலும், புலவித வியாதிகளாலும் பயிர்கள் தாக்கப்பட்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட பல காரணங்களால் விளைபொருள்கள் ஒரே தன்மையுடையதாய் இருப்பதில்லை.

விளைபொருள்கள் பலதரப்பட்டதாயிருப்பதால் அவற்றை விற்பனை செய்வதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. வியாபாரிகள் வாங்குவதற்கு முன் விவசாயப் பொருளின் மாதிரியை நன்றாக சோதித்துப் பார்க்கிறார்கள். கல், மண், தூசிகள் கலந்திருக்கின்றனவா, ஈரப்பதம் இருக்கிறதா, ஒன்றுபோல் இருக்கிறதா, அல்லது மற்ற ரகங்கள் கலந்திருக்கின்றனவா, பூச்சியரிக்கப்பட்டிருக்கிறதாவென்று கவனிப்பார்கள். அன்று நிலவியிருக்கும் மார்க்கெட் விலையிலிருந்து மேலே குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு குண பேதத்திற்கும் விலையைக் குறைத்து தாங்கள் கொடுக்கவிருக்கும் விலையைக் கூறுவார்கள். கண்பார்வை நிதானத்தில்தான் இப்பரிசோதனை செய்யப்படுகிறது.

வியாபாரிகள் தங்கள் அனுபவத்தினால் உத்தேசமாகக் கூறும் தரபேதங்களை பொருளை விற்கும் விவசாயி ஏற்றுக்கொண்டு வியாபாரிகள் கூறும் விலையையும் ஒத்துக்கொள்ள நேரிடுகிறது. பொருள்களை நல்ல தரமாக தயாரித்து மார்க்கட்டிற்கு எடுத்துச் சென்றால் கூடுமானவரை தர பேதங்களைத் தவிர்த்து நல்ல விலையைப் பெறலாம். நெல்லின் தரபேதங்களையும், அதன் தரத்தை உயர்த்த கவனிக்கவேண்டிய முறைகளையும் கீழேக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நெல்

* நெல்லில் ஒவ்வொரு தினுசும் நல்ல ரகமாயிருக்க வேண்டுமாயின் மாற்று தினுசுகள் கலந்திருக்கக்கூடாது;
* நன்றாக காய்ந்திருக்க வேண்டும்;
* ஈரப்பதம் 14 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக் கூடாது;
* தானியங்கள் நிறத்திலும் (colour), அளவிலும் (size), உருவத்திலும் (shape) ஒன்று போலிருக்கவேண்டும்;
* பூஞ்சணம் பிடித்த, பூச்சியரிக்கப்பட்ட மற்றும் நிறம் மங்கிய தானியங்கள் கலந்திருக்கக் கூடாது;
* கல், மண், தூசி, பதர் முதலியன மிகக் குறைந்து காணப்பட வேண்டும்.

இம்முறையில் தயாரிக்கப்பட்ட நெல், நல்ல ரகம் எனக் கருதப்பட்டு, மார்க்கட்டில் சீக்கிரம் விற்பனையாகும்: நல்ல விலையும் கிடைக்கும்.

ஒவ்வொரு தினுசு நெல்லையும் நான்கு ரகங்களாகப் பிரிக்க "அக்மார்க்" தரங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இத்தரங்கள் இந்தியா முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது.

நெல்லின் ரகங்களும் அதன் விபரங்களும்

ரகங்களின் பெயர்.	முக்கிய குணபேதங்களின் உச்ச வரப்பு (சதவிகிதம்).			மொத்தம்.
	வேண்டாத அயல் பொருள்கள்.	மாற்று தானியங்க்ள்.	பூச்சி அரிக்கப் பட்ட, முதிர்ச்சி யடையாத மற்றும் பாதிக் கப்பட்ட தானி யங்கள்.	
I	1·0	5·0	1·0	7·0
II	2·0	10·0	2·0	14·0
III	4·0	15·0	5·0	24·0
IV	7·0	30·0	10·0	47·0

மேலே குறிப்பிட்டிருக்கும் நெல்லின் தரங்களை ஆராய்ந்து பார்த்தால் நெல்லின் தரத்தைப் பாதிக்கும் குணங்களும் அதைத் தவிர்த் விவசாயிகள் முககியமாக I, II தரங்களடங்கிய நெல்லையே தயாரிக்க முற்பட வேண்டும். கீழே குறிக்கப்பட்டிருக்கும் சில முறைகளைக் கையாண்டால் நல்ல ரக நெல்லை தயாரிக்கலாம்.

நெல்லின் ஈரம்.—கொஞ்சம் ஈரமிருந்தாலும் வியாபாரிகள் அதை மிகப்படுத்திக் கூறி விலையை ஒன்றுக்கு முக்காலாகக் குறைக்கத் தயங்குவதில்லை.

ஆகவே நெல் அறுவடைக்குப்பின் நன்ருக காய வைக்கவேண்டும். காயவைப்பதற்கும் சில தினங்களே யாகும். அதிக செலவும் ஆகாது, நல்ல விலைக்கும் விற்கலாம்.

அயல் பொருள்களின் கலப்பு.—கல், மண், பதர், தூசி கலந்திருந்தால் நெல்லின் தரம மிகக் குறைந்து தென்படும். களங்களை கட்டியாகத் தயார் செய்து சுத்தம் செய்து நெல் கதிர்களை நிதானமாகப் போர் அடித்தால் இதைத் தவிர்ககலாம்.

கலப்பு தானியங்கள்.—நெல்லில் மட்ட ரக நெல் தானியங்கள் கலநதிருந்தால் அதன் தரம் மிகக் குறைந்துவிடும். கிச்சிலி நெல்லில், சின்ன சம்பா நெல் தானியங்கள் 10 சதவீதத்திற்கு மேல் கலந்திருந்தாலும் அது III-ம் தரம் ஆகிவிடுகிறது. இது கண்பார்வையின் மூலம் அறிந்துகொள்வது கூட சிரமமாகும். விதை நெல் கலப்பில்லாமலிருந்தால் மகசூலிலும் கலப்பு இருக்காது. உயர்ந்தரக பொறுக்கு விதைகளை உபயோகித்தால் இக் கலப்பைத் தவிர்க்கலாம். பயிர் பூப்பிடிக்கும்பொழுது கலப்புக் கதிர்களை நீக்கி கலப்பைத் தவிர்க்கலாம்.

முதிர்ச்சியடையாத தானியங்கள்.—ஒன்று போலுள்ள விதை நெல்லை உபயோகிக்காததாலும், வளர்ச்சியில் வித்தியாசமான நாற்றுகளைநடுவதாலும் பயிர்கள் ஒரேசமயத்தில் கதிர் விடுவதில்லை. இதனுல் தானியங்கள் ஒரே சமயத்தில் முதிர்ச்சியடைவதில்லை. அறுவடை செய்யும்போது பல கதிர்கள் முதிர்ச்சியடையாமலிருக்கின்றன. இதைத் தவிர்க்க நல்ல பொறுக்கு விதைகளை உபயோகிக்க வேண்டும்.

பூச்சியரிக்கப்பட்ட மற்றும் வியாதியால் பாதிக்கப்பட்ட தானியங்கள்.—பயிர்கள் கதிர்கள் வாங்கியபின் ஏற்படும் நோய்களாலும், பூச்சி தாக்குதலாலும், தானியங்கள் பாதிக்கப்படுகின்றன. இவ்வியாதிகளையும், பூச்சிகள் தாக்குவதையும் தவிர்க்க காலா காலத்தில் மருந்துகள் உபயோகிக்கவேண்டும். வியாதிகளால் தாக்கப்படாத வித்துகளை உபயோகிக்கவேண்டும். உதாரணமாக கோ. 25 வித்துகளை உபயோகித்தால் கொலை நோய் பயிரைத் தாக்காது. இதனுல் சேதங்களைத் தவிர்த்து நல்ல ரக நெல்லை உற்பத்தி செய்ய முடியும்.

மேற்கூறப்பட்ட முறைகள் மிக எளியவையே யாகும். யாவரும் கையாளத் தகுந்தவை. இமமுறைகளை உபயோகிதது நல்ல ரக நெல்லை உற்பததி செய்தால் விவசாயிகள் தங்கள் விளைபொருளுக்கு நல்ல விலைபெறலாம்.

கேழ்வரகு மகசூல் பெருக்க "சூப்பர் கம்போஸ்ட்" இடுங்கள்

(சி. கே. முஹமத் கவுஸ், எரு அபிவிருத்தி ஆய்வாளர், ஈரோடு.)

சூப்பர் கம்போஸ்ட் இட்ட கோ. 1 கேழ்வரகுப் பயிர் 2,260 ராத்தல் தானியமும், 7,200 ராத்தல் தாளும் கொடுத்தது. ஈரோடு தாலுகா, வைரப்பாளையம் கிராமத்தில் திரு. கிருஷ்ணசாமி பிள்ளை கேழ்வரகுப் பயிரில் எரு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நடத்திய சோதனையின் முடிவு இது.

சூப்பர் கம்போஸ்ட் இட்ட பயிர்.

இவ்விளைச்சல் விவசாயிகளிடையே ஒரு புது உணர்வை தூண்டிவிட்டிருக்கிறது. சூப்பர் கம்போஸ்ட் தயாரிக்க பலரும் முன் வந்திருக்கிருர்கள்.

இந்தியாவின் பயிர் நிலங்களிலிருந்து அதிக உணவிற்காக...!

இன்று, என்றையும்விட, நாட்டிற்கு அதிக உணவு தேவையாக இருக்கிறது. இது விவசாயிகளுக்கு ஒரு சவாலாகும். கிர்லோஸ்கர் டீஸல் என்ஜின்கள் இந்த சவாலுக்கு ஒரே விடையாகும்.

ஒவ்வொரு கிர்லோஸ்கர் என்ஜினும் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாகவும், சுலபமாக கையாளக்கூடிய தாகவும், விற்பனைக்குப் பிறகு நேர்த்தியாக கவனிக்கப்படுகின்றதாகவும் இருக்கின்றது. இது மிக நம்பத்தகுந்ததும் கூட! கிர்லோஸ்கர் என்ஜின்களை உபயோகித்து நாட்டிற்கு அதிக உணவு உற்பத்தி செய்யுங்கள்.

கிர்லோஸ்கர்

டீஸல் என்ஜின்கள்

3 ஹார்ஸ் பவர் முதல் 15 ஹார்ஸ் பவர் வரை





மாதிரி AV 1 அண்டு JV 1
5 முதல் 7.5 ஹார்ஸ் பவர் வரை



மாதிரி 1 M
10 முதல் 12 ஹார்ஸ் பவர் வரை



மாதிரி AV 2 அண்டு JV 2
10 முதல் 15 ஹார்ஸ் பவர் வரை

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.,
எல்பின்ஸ்டன் ரோடு, புனா-3 (இந்தியா)

AY/KOEL/T-7/63

ஸ்ரீவில்லிபுத்தூர் உகண்டா பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

(தமிழ்நாடு கூட்டுறவு பதிவாளர்—சென்னை-5.)

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவில் எம்.சி.யு. 2 என்ற நீண்ட இழைப்பருத்தி அதிகமாகப் பயிராகிறது. இந்த உயர்ந்த ரகம் 60 நெ. 10,0 நெ. நூல்கள் நூற்க பெரிதும் பயன்படுகிறது. இதனைப் பயிரிடும் விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவில் "உகண்டா பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்" ஒன்று நீண்ட நாட்களாக செயல்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு பதிவாளர் திரு வி. கே. அப்பண்டராஜன், லாபத் தொகையை விவசாயிகளுக்கு வழங்குதல்.

* இந்த சங்கம் அங்கத்தினர்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களை விநியோகிக்கிறது.

* அவர்கள் பருத்தியை நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு செய்கிறது.

* விவசாயிகளுக்கென ஒரு "ஜின்னிங் பாக்டரி" ஒன்றையும் நிறுவியிருக்கிறது.

* பருத்தி விதை அபிவிருத்தி திட்டத்தின் மூலம், அடுத்து வரும் பருவத்திற்கு கலப்பில்லாத எம்.சி.யு. 2 பொறுக்கு விதையை விவசாயிகளுக்கு வழங்குகிறது.

* பருத்தியை கலப்படம் இன்றி பாதுகாக்க விதை அபிவிருத்தி திட்டத்துடன் "கொள்முதல் திட்டம்" ஒன்றையும் 1962-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்துகிறது.

விதை அபிவிருத்தி திட்டம்

பருத்தி அபிவிருத்திக்கென வருடந்தோறும் ஒரு குறிப்பிட்ட விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த விவசாயிகள் தங்கள் பண்ணையில் (விதைப்பண்ணை) விவசாய அலுவலர்கள் மேற்பார்வையில் கலப்பில்லாத எம்.சி.யு. 2 பருத்தி சாகுபடி செய்து விற்பனைச் சங்கத்திற்கு அனுப்புகின்றன. இப்பருத்தியை கூட்டுறவு சங்க ஜின்னிங் பாக்டரியில் அரைத்து விதை சங்கத்தின் மூலம் இதர விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

பருத்தி கொள்முதல் திட்டம்

இதுவரை விதைப்பண்ணைப் பருத்தியை விவசாயிகளிடமிருந்து சேகரிக்க இச்சங்கம் தனிப்பட்ட வியாபாரிகளை நியமித்திருந்தது. இந்த வியாபாரிகள்கிராமங்களுக்குச் சென்று விதைப்பண்ணைப் பருத்தியை விலைக்கு வாங்கி சங்கத்தின் ஜின்னிங் பாக்டரியில் அரைத்து விதையை சங்கத்திற்கு ஒப்படைத்து, பஞ்சை அவர்களே எடுத்துச் சென்றனர். ஆனால் கொள்முதல்திட்டத்தின்படி சங்கமே விவசாயிகளிடமிருந்து நேரடியாக பருத்தியை கொள்முதல் செய்கிறது. சிறு விவசாயிகள் தங்களுடைய குறைந்த மகசூலை கிராமத்திலிருந்து மண்டிகளுக்கு எடுத்துச் சென்று விற்க வசதி இல்லை; கிராமத்திலேயே வரும் வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்குக் கூட விற்று விடுகின்றனர். இப்போது மேற்படி சங்கம் கிராமத்திற்குச் சென்று அங்கேயே விவசாயிகளிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்வதால் விவசாயிகள் நல்ல விலை பெறுகின்றனர். இதனால் கலப்படமும் ஏற்படுவதில்லை.

விதைப்பண்ணையின் கீழ் மொத்தம் 6,000 எக்கர் உள்ளது. இதில் விளையும் பருத்தி முழுவதையும் ஒரே சமயத்தில் வாங்க பணவசதியும் இதர வசதிகளும் இல்லை. இதனால் முதல் வருடத்தில் சுமார் 2,000 எக்கர் நிலத்திலிருந்து கிடைக்கும் பருத்தியை மட்டும் சங்கம் கீழ்க்கண்ட முறையில் கொள்முதல் செய்கிறது.

1. சங்கம் தேர்ந்தெடுத்த 15 கிராமங்களில் உள்ள விதைப் பண்ணை விவசாயிகளுக்கு சம்பந்தப்பட்ட கிராம நாணய சங்கங்கள் மூலம் விவசாயக் கடன்கள் வழங்கப் படுகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் முனிசிபல் எல்லைக்குள் கிராம நாணய சங்கங்கள் இல்லாததால், அங்குள்ள விவசாயிகளுக்கு விற்பனை சங்கம் நேராக விவசாயக் கடன்கள் வழங்குகிறது.

2. சாதாரணமாக பருத்திக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் கொள்முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 2?0 வழங்கப்படுகிறது.

3. கிராம நாணயச் சங்கம் கடன் விண்ணப்ப மனுக்களை விற்பனைச் சங்கத்திற்கு அனுப்புகிறது. விற்பனைச் சங்கம் அவற்றைப் பார்வையிட்டு மத்திய பாங்கிற்கு சிபாரிசு செய்கிறது.

4. இந்தத் திட்டத்தின் கீழ் கடன் வாங்கிய விவசாயிகள் தவறாது விற்பனைச் சங்கத்திற்கே தங்கள் பருத்தியை விறக வேண்டும். இவ் வகையில் அவர்களிடமிருந்து உறுதி மொழிப் பத்திரம் வாங்குகிறது.

5. விற்பனைச் சங்கம், ஒவ்வொரு கிராம நாணயச் சங்கத்திலும் நியமிக்கப்பட்ட மார்க்கட்டில் பஞ்சாயத்தார்கள் மூலமும் அதனுடைய சிப்பந்திகள் மூலமும், மேற படி விவசாயிகளிடமிருந்து பருத்தியை கிராமத்திலேயே நேரிடையாகக் கொள்முதல் செய்கிறது. அவ்வப்போது உள்ள மார்க்கெட் விலையை அனுசரித்தே பருத்தி வாங்கப் படுகிறது.

6. பருத்தி வாங்கும்போது விற்பனைத் தொகையிலிருந்து அந்த விவசாயிகள் வாங்கிய கடனைப் பிடித்துக் கொண்டு மிகுதியே அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

7. இப்படி வாங்கிய பருத்தியை விற்பனைச் சங்கம் கனது ஜின்னிங் ஃபாக்டரியில் அரைத்து விதையை எடுத்துக்கொண்டு, பஞ்சை ராமநாதபுரம் கூட்டுறவு நூற்பு ஆலைக்கும் மற்ற தனிப்பட்டவர் நூற்பு ஆலைகளுக்கும் விறபனை செய்கிறது.

8. கொள்முதல் விற்பனையில் சங்கத்திற்குக் கிடைக்கும் லாபத் தொகையில் 25 சதவீதம் வியாபார நஷ்ட நிதிக்கு ஒதுக்கப்படுகிறது. மிகுதித் தொகை சம்பந்தப் பட்ட விவசாயிகளுக்கு அவரவர் மகசூலுக்குத் தக்கவாறு போனஸாக அளிக்கப்படுகிறது

இவ்விதக் கொள்முதல் வியாபாரத்தில் எதிர்பாராத வகையில் நஷ்டம் ஏற்படலாம். அதனை ஈடுகட்ட அந்த வருடத்தில் வாங்கிய பருத்தி மதிப்பில் 10 சதவீதம் வரை அரசாங்கம் பண உதவி செய்கிறது.

கொள்முதல் விற்பனையில் சங்கத்திற்கு ரூ. 18,600 லாபம் கிடைத்தது. வியாபார நஷ்ட நிதிக்கு 25 சதவீதம் ஒதுக்கப்பட்டது. மிகுதித் தொகையாகிய ரூ. 13,920 சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு போனஸாக பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனையொட்டி 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதியன்று ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கக் கட்டிடத்தில் நடந்த விழாவில் சென்னை மாநில கூட்டுறவு பதிவாளர் திரு. வி. கே. அப்பண்டராஜன் அவர்களால் லாபத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பருத்தியை குவின்டால் ரூ. 155-க்கும் அதற்குக் குறைந்த விலைக்கும் விற்ற விவசாயிகளுக்கு ஒரு குவின்டாலுக்கு ரூ. 4-ம், ரூ. 155-க்கு மேல் விற்றவர்களுக்கு குவின்டாலுக்கு ரூ. 3 வீதமும் போனஸாக வழங்கப்பட்டது.

இந்த கொள்முதல் திட்டத்தின் மூலம் விவசாயிகள் நல்ல பலன் அடைகின்றனர் என்பது கண்கூடு. முன் வருடங்களில் பருத்தி விலை ஒரு பொதிக்கு ரூ. 190 முதல் ரூ. 220 வரை இருந்தது. இந்த வருடம் சங்கம் கொள்முதல் செய்ய ஆரம்பித்தபின், மற்ற வியாபாரிகளும் போட்டியிட்டு பருத்தி விலை பொதி ஒன்றுக்கு ரூ. 265 வரை ஏறியது. ஆகையால் விவசாயிகள் தங்கள் பருத்தியை முன் வருடங்களைக் காட்டிலும் நல்ல விலைக்கு விற்றனர். மேலும் போனஸ் என்ற முறையில் ஒரு குவின்டாலுக்கு ரூ. 3 முதல் 4 வரை பெற்றனர். இவ்வித நன்மைகளை அளித்த இந்த ஸ்ரீவில்லிபுத்தூர் உகண்டா பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நடப்பு வருடத்திலும் கொள்முதல் திட்டத்தை ஏற்று நடத்தி வருகிறது. இந்தச் சங்கத்தின் தலைவர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல.ஏ. ஆவார்கள். இவரது பெருமுயற்சியாலும் மற்ற நிர்வாகக் குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பாலும் சங்கம் நல்ல முறையில் வளர்ந்து வருகிறது.

மிகச் சிறந்த உயர்தர ஜாதி நல்ல மகசூல் தரும்
உள்நாட்டு, வெளி நாட்டு
காய்கறி விதைகள்
திடமான நம்பிக்கை வாய்ந்த உண்மை ஜாதி
ஒட்டு மாஞ்செடிகள்
எலுமிச்சை, சாத்துக்குடி முதலிய
பலவிதப் பழச் செடிகள்
புஷ்ப விதை, செடிகள், பூச்சிநோய் மருந்துக்கள்
கோரையையும் அடியோடு அழிக்கும்
களை நாசினி
கிடைக்குமிடம் :
ராஜா பண்ணைத் தோட்டம்
2, டாக்டர் சிங்காரவேலு தெரு
தியாகராயநகர் சென்னை-17
Grams : RAJSEED. — Phone : 42262

குறைந்த செலவில் அதிக குறுவை மகசூல் உற்பத்தி

ஸ்ரீ வி. கே. சேதுராமன், தலைவர், வில்லியநல்லூர் பஞ்சாயத்து, மிராசுதார், 37, வில்லியநல்லூர்.

நான் மாயூரம் தாலூகா, குத்தாலம் பிளாக்கு வில்லியநல்லூரிலுள்ள ஒரு விவசாய உற்பத்தியாளர். எனக்கு சுமார் 10 ஏக்கர் நஞ்சை குறுவை தாளடி இரு போக சாகுபடி நிலங்கள் இருக்கின்றன.

ஏ.டி.டீ. 3. குறுவை விதையை வடிமுனைக் குழாய் பம்பு செட்டு மூலம் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் தேதி முதல் நாற்று விட்டு (சாதாரண கிராமிய முறையில் சென்டு 1-க்கு 2 பட்டணம் படி வீதம் விட்டு) வைத்திருந் தேன். நாற்று நன்றாக வளர்ந்து வந்தது. நான் எப்பொழுதும் விவசாயத்தை நல்ல முறையில், நிறைய உரம்போட்டு செய்துவருவது வழக்கம். அதேபோல் நிலங்கள் நிறைய மகசூல் கொடுத்து வருகிறது. சாதாரண மாய் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 28–29 மூட்டைகள் வீதம் (சில நிலங்கள் ஏக்கர் 1-க்கு 29-ம சிற்சில நிலங்கள் ஏக்கர் 1-க்கு 32 மூட்டைகளும்) கண்டு முதல் ஆகிக் கொண்டு வருகிறது. இந்த வருடம் நாற்றுக்கு வயது 32 நாட்கள் ஆகிவிட்டது. காய்ந்திருந்தது. தண்ணீர் தாமதமாய் வந்ததால் வேலைகளைச் சரிவர செய்ய முடிய வில்லை. குறுவை நாற்று நாள்பட்டதாய் இருந்தும் நெல் விளைவு வெகுவாகக் குறையவில்லை. சிற்சில நிலங்கள் கூடுதலாக கூட விளைந்திருக்கிறது. அதற்குக் காரணம் இவ்வருடம் வந்திருக்கும் கால்சியம் அமோனியம் நைட்ரேட் (Calcium Ammonium Nitrate) என்பது என்னுடைய அனுபவத்தில் கண்டது. தொடர்ந்து சி.ஏ.என்.-யையே விநியோகம் செய்யவேண்டும்.

குத்தாலம் பிளாக்கு விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. ஜி. பாலசந்திரன் அவர்களும், நானும் சேர்ந்து என் நிலத்தில் ஒரு சோதனையாக 25 செண்டுகளில் மட்டும் ஜப்பானிய முறைச் சாகுபடி செய்துபார்த்தோம். சோதனை விவசாய நிலம் அறுவடைக்கு முன்பு பார்ப் பதற்கு மிகவும் அழகாயும் கதிர்கள் 8 முதல் 10 அங்குலம் நீளமுள்ளதாயும் நெல் அதிக பருமன் உள்ளதாயும், வைக்கோல் நல்ல மஞ்சள் நிறமுள்ளதாயுமிருந்தது. அதை தனியாக அடித்து கண்டு முதல் செய்தோம். 25 செண்டு நிலம் 24 கட்டுகள் கண்டது. நெல் 1,206½ பவுண்டு. அதாவது ஏக்கர் 1-க்கு 4,826 பவுண்டுகள் கண்டது. அதே நிலத்தில் சாதாரண முறையில் நடப் பட்ட 25 செண்டு நிலம் 18 கட்டுகள் கண்டது. நெல் 762 பவுண்டுகள் அதாவது ஏக்கர் 1-க்கு 1,778 பவுண்டுகள் (14 மூட்டைகள்) நெல் லாபகரமாய் விளைந்திருக்கிறது. அதன் விலை ரூ. 238, அதிகம் செலவானது ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 80, நிகர லாபம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 158. விவரங்கள் கீழே கொடுத்திருக்கிறேன். இதே போல் எல்லா உற்பத்தியாளர்களும், எல்லா நிலங்களையும் விவ சாயம் செய்து உற்பத்தி செய்தால் உணவு பற்றுக்குறை உடன் நீங்கி, நாமும் வேறு தேசங்களுக்கு உணவு பண் டங்களை அனுப்பலாம் என்பதில் கொஞ்சம்கூட சந்தேக மில்லை.

சோதனை விவசாயம் செய்த 25 செண்டு நிலத்தின் செலவு விவரங்கள்

	ரூ.	ந.பை.
அக்ரோஸான் கலந்த ஏ. டி. டீ. 3 விதைபடி 7-க்கு	5	00
விதை விட செலவு	2	00
தண்ணீர் பாய்ச்சிய செலவு	2	00
உழவு—5 உழவு கூலி	10	00
மாட்டு தொழு உரம் 5 வண்டி ..	10	00
காவாளை 625 பவுண்டு	6	25
சி. ஏ. என். 39 பவுண்டு	5	00
சூப்பர் 70 பவுண்டு	8	00
பொட்டாஷ் 19 பவுண்டு	3	50
நடவு கூலி 4 ஆளுக்கு	4	00
கூலி ஆள் 3-க்கு ஜாடா வேலையும் செண்டு 25-க்கு	6	00
பூச்சி மருந்து	1	00
எலி பிடிப்பு	1	00
2 தடவை இடை உழவு செய்ய ..	3	00
ஆக ரூ.	66	75

ஆக 25 செண்டுக்கு செலவு ரூ. 66·75 கிடைத்த மக சூல் 1,206½ பவுண்டுகள்.

விவசாயிகளுக்கோர் நற்செய்தி

தமிழ்நாடு விவசாயச் செய்தி நிலையத்திலிருந்து அவ் வப்போது வெளியிடப்படும் இலவச துண்டுப் பிரசுரங்களை யும், சிறு நூல்களையும் பெற விரும்பும் விவசாயிகள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

விண்ணப்பித்துக்கொள்ளும் விவசாயிகளின் பெயர் இவ்வலுவலக "இலவச பிரசுரங்கள் பெறுவோர்" பட்டி யலில் பதிவு செய்துகொள்ளப்பட்டு இந் நிலையத்தில் தயாரிக்கப்படும் இலவச பிரசுரங்கள் அனுப்பப்படும்.

விண்ணப்பத்தில் உங்கள் விலாசத்தை தவறாது, தெளி வாக, அருகிலுள்ள அஞ்சல் நிலையத்தைக் குறிப்பிட்டு எழுத மறவாதீர்கள்.

விவசாயச் செய்தி அலுவலர்,
36/B, மவுண்ட் ரோடு, சென்னை-2.

உங்களுடைய பிரச்சினை இதுவா.... அல்லது இதுவா ?



வெள்ளம் அல்லது வறட்சி,
இந்தப் பிரச்சினையை
திட்டவட்டமாக, திறமையாகத் தீர்க்க



ஜான்ஸ்டன்

வெர்டிகல் பம்புகள்

நம்பிக்கையான ஜான்ஸ்டன் வெர்டிகல் பம்புகள் வாடிக்கைக்காரர்கள் கேட்கும் அளவுப்படி தயாரிக்கப்படுகின்றன. எளிதில் மாற்றிக்கொள்ளக்கூடிய உறுப்புகளுடன் பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. உங்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும் ஜான்ஸ்டன் அதைத் தீர்க்கும்.

GROUP OF MACNEILL & BARRY LTD. COMPANIES

மேலும் விவரங்களுக்கு எழுதுங்கள் :
ஜான்ஸ்டன் பம்ப்ஸ் இந்தியா லிமிடெட்
2. பேர்லி பிளேஸ், கல்கத்தா-1

JOHNSTON
TURBINE PUMPS

JPL/3A TAM

உருளைக்கிழங்கு விளைச்சலில் முப்பெரும் வெற்றி எனக்கே!

நீலகிரி மாவட்டத்தில் உள்ள காக்காத் தோப்பில் 15 வருடங்களாக உருளைக் கிழங்கு சாகுபடி செய்து வருகிறேன். மூன்று முறை நீலகிரி மாவட்ட உருளைக் கிழங்கு விளைச்சல் போட்டியில் பரிசு பெற்றேன். காரணம் விவசாயத்தில் எனக்குள்ள ஆர்வம், அயரா உழைப்பும் நான் செய்த விஞ்ஞான முறை விவசாயமே.

விதை.

* பெங்குருசன் ரகம்
* 2 முதல் $2\frac{1}{2}$ அவுன்ஸ் எடையுள்ள நன்கு பக்குவப்படுத்தப்பட்ட விதையே உபயோகித்தேன்.

இறைவைப் பயிருக்கு நிலம் தயாரித்தல்.

* நவம்பர் முதல் வாரத்துக்கு முள்போட்டு கட்டிகளை உடைத்தேன்.
* வடிகால் வசதி செய்தேன்.
* முள் கொத்துகளால் உடைத்து மண் நன்கு பக்குவப் படுத்தினேன்.
* நன்கு மக்கிய, பொடி செய்யப்பட்ட மாட்டெரு, எக்கருக்கு 40 டன் நன்கு கலக்கச் செய்தேன்.

நடவு.

* பிப்ரவரி முதல் வாரத்தில் $1\frac{1}{2}$ அடி இடைவெளியில், 1 அடி ஆழத்தில் பார் பிடித்தேன்.
* பாரின் அடிப்பாகத்தில் 3/4 அடிக்கு ஒன்றாக விதைக் கிழங்கு நட்டேன்.
* எக்கருக்கு 1,760 ராத்தல் கலப்பு உரம் தூவி, கிழங்கின் மேல் $\frac{3}{4}$ அடி உயரத்தில் மண் பரப்பி பார் பிடித்தேன்.

நீர்ப்பாசனம்.

* விதைத்த 15—20 நாட்களுக்குள் தண்ணீர் பாய்ச்சினேன்.
* மழையில்லாக் காலங்களில் கால்வாய்களில் தண்ணீர் தேக்கி வாளி மூலம் இறைத்தேன்.
* மண்ணில் ஈரம் சாரும் வரை, வாரத்திற்கொரு முறை தண்ணீர் பாய்ச்சினேன்.
* நன்கு நீர்ப்பாய்ச்சிய நிலத்தில் 30-35 நாட்களில் செடிகள் பூமிக்கு மேல் தோன்றின.

பின் செய்நேர்த்தி.

* செடி 2 முதல் 3 அங்குலம் வளர்ந்ததும் தடுப்பு முறையாக டைத்தேன் z 78 மருந்தும், டி.டி.டி. 50 சத மருந்தும் தெளித்தேன்.
* பின் முள்கொத்துக்களை கொடுத்தேன்.
* கொத்தியபின் நிலத்தை காய விடுதல் நல்லது.
* 5 முதல் 7 நாட்களுக்கொருமுறை டைத்தேன் z 78 தெளித்தேன்.
* பருவ மழைக்குப்பின் கால்வாய்களில் தேக்கிய தண்ணீர் வடித்து இரண்டாம் களை எடுத்தேன்.
* செடி 1 அடி வளர்ந்ததும் மண் அணைத்தேன்.
* செடியைத் தாக்கும் எலிகளை ஒழிக்க ஏற்பாடுகள் செய்தேன்.
* செடிகள் உடைந்து போகாது கவனமாய் 21 தடவைகள் மருந்தடித்தேன்.

அறுவடை.

* செடிகள் நோயால் தாக்கப்படவில்லை.
* செடிகள் வளர்ந்து ஜூன் இரண்டாம் வாரம் காய ஆரம்பித்து ஜூலை முதல் வாரத்தில் நன்கு காய்ந்தது.
* பின் அறுவடை செய்தேன்—65,120 ராத்தல் கிழங்கு கிடைத்தது. 1963-ம் வருட உருளைக் கிழங்கு விளைச்சல் போட்டியில் இது ஒரு புதிய சாதனை.

என்னுடைய அனுபவங்கள் உங்களுக்கும் பயன்படும் என்று நம்புகிறேன்.

வி. எம். பொன்னன்,
காக்காத் தோப்பு, நீலகிரி மாவட்டம்.

தென்னந்தோப்புகளில் வாழை ஓர் லாபகரமான ஊடுபயிர்

(ஜி. துரைசாமி, தென்னை விஸ்தரிப்பாளர், பட்டுக்கோட்டை.)

வட ஆற்காடு மாவட்டத்தில் பாசன வசதிகள் உள்ள தென்னந்தோப்புகளில் வாழை ஓர் ஊடுபயிராகப் பயிரிடப்பட்டு, ஏக்கருக்கு சுமார் 500–லிருந்து 600 ரூபாய் வரை லாபம் கிடைக்கின்றது.

வாழை ஊடு சாகுபடி தென்னை உற்பத்தியை அதிகரிக்கிறது !

* வாழைக்கிறைத்த நீர் தென்னைக்கும் பயன்படும்.
* வாழைக்கிடும் சத்துள்ள பயிருணவுகள் தென்னைக்கும் கிடைக்கும். குறிப்பாக ''பொட்டாஷ்'' உரம்.

வாழைஊடு சாகுபடி குறிப்புகள்

நிலம் : நீர் பாசனம் வடிகால் வசதியுள்ள, வளமுள்ள களிமண் கொண்ட நிலமாயிருக்க வேண்டும்.

ரகம் : பச்சை வாழை, ரஸ்தாளி, மொந்தன் வட ஆற்காடு மாவட்டத்தில் பெரும்பாலும் பயிரிடப்படுகின்றன.

முன்செய் நேர்த்தி

* தென்னந் தோப்புகளில் 4 அல்லது 5 முறை உழவு.
* உழவுக்கு முன் 30 முதல் 40 வண்டி மக்கிய தொழு எரு.
* 8 அடி இடைவெளிக்கு ஒன்றாக 2' × 2' × 2' அளவுள்ள குழிகள் ஒரு மாதத்திற்கு முன்னே வெட்டி ஆறவைத்தல் நல்லது.
* குள்ள வாழை தினுசுகளுக்கு 5 முதல் 8 அடி இடைவெளி போதுமானது.
* குழிகள் ஆறிய பின் மேல் மண்கொண்டு நிரப்ப வேண்டும்.

நடவும் முறையும்

* குளிரும் அதிக வெப்ப காலமும் நடுவதற்கு ஏற்றதல்ல.
* வடஆற்காடு மாவட்டத்தில் ஜனவரி (தை) மாதத்தில் நடைபெறுகிறது.
* நோயற்ற செடிகளிலிருந்து கன்றுகளைத் தேர்ந்தெடுங்கள்.
* காய்க்கும் செடிகளிலிருந்து நடுவதற்கு கன்றுகளைத் தேர்ந்தெடுங்கள்.

உரமும் உரமிடுதலும்

* அடியுரமாக மக்கிய தொழு உரம், பிண்ணாக்குத் தூள், கம்போஸ்ட்.
* அமோனியம் சல்பேட் செடிக்கு $1\frac{1}{4}$ ராத்தல்—பாதியை நட்டு 2, 3 மாதங்களுக்குப் பின்னும் மீதத்தை 5 மாதத்திற்குப் பின்னும் இடவும்.
* செடிக்கு 2, 3 கூடை (30 ராத்தல்) சாம்பல் இடவும்.
* உரமிட்டதும் தண்ணீர் பாய்ச்சுங்கள்.

பின் செய் நேர்த்தி

* நட்ட ஒரு மாதத்திற்குப் பின் மண் வெட்டு, களைக்கொத்து.
* பின் களை தோன்றும்போது களை கொத்துகளை எடுக்கவும்.

கன்றுகளைக் களைந்தெடுங்கள்

* நட்ட 6-வது மாதத்திலிருந்து கன்றுகள் தோன்றும்.
* முதலில் தோன்றும் இரண்டு கன்றுகளை களைந்து விட்டு மூன்றாவது கன்றை வளர விடுங்கள்.
* பின் தோன்றும் கன்றுகளை எல்லாம் களைந்தெரியுங்கள்.
* தாய் மரத்துடன் போட்டியிடுவதைத் தடுக்கவே அதிகப்படி கன்றுகள் களைக்கப்படுகின்றன.
* தாய் மரம் ஈன்ற பின், மூன்றாம் கன்றே அடுத்த வருட தாய் மரமாகும்.

நோய்க்கிடங்கொடேல்

* வட ஆற்காடு மாவட்டத்தில் இலைப்புள்ளி நோய் காணப்படுகிறது.
* தடுப்பதற்கு தாமிர கலவை பூசண மருந்துகளை (1 கி. கி. மருந்தை 80 காலன் தண்ணீரில் கலந்து) தெளியுங்கள்.

அறுவடை

* மொந்தன், ரஸ்தாளி, பச்சை வாழை 10-லிருந்து 11-வது மாதத்தில் அறுவடைக்கு வரும்.
* அறுவடை 3 மாதங்கள் தொடர்ந்து நடக்கும்.
* அறுவடை செய்த பழங்கள் காய்ந்த சருகுகளில் மூடிக் கட்டப்பட்டு பஸ், லாரி மூலம் வியாபாரிகளுக்கு அனுப்பப்படுகிறது.
* ஏக்கருக்கு 500 லிருந்து 600 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது.

''உபரி லாபம் பெற வாழை பயிரிடுங்கள்.''

உருளைக்கிழங்கின் இலைகருகல் நோய்

சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஏ. கே. பசுலுல்லாகான், ஆர். ராமசாமி, பூசண இயல் பிரிவு.

உருளைக்கிழங்கைத் தாக்கி பெருத்த சேதம் விளைவிக்கும் கொடிய நோய் "இலைகருகல் நோய்" (Late Blight) நீலகிரி மாவட்டத்தில் பிஷப்டவுன், குளிசோலை, மேலூர், பாலாடா, முத்தோரை, நஞ்சநாடு முதலிய இடங்களில் இந்நோய் அதிக சேதம் விளைவித்துள்ளது.

நோய் தாக்கிய பயிர்.

நோயின் அறிகுறிகள் :—

* "பைடாப்தோரா இன்பஸ்டன்ஸ்" (Phytopthora infestance) என்னும் பூசணத்தால் ஏற்படு கிறது.
* இலைகள், காம்புகள் மீது பெரிய கருஞ்சிவப்பு நிற புள்ளிகள் தோன்றும்.
* தோன்றிய புள்ளிகள் இலை முழுதும் பரவி அழுகத் தொடங்கும்.
* தாக்கப்பட்ட இலைகளின் அடிப்பாகத்தில் பூசண வித்துக்களுள்ள நிறத்தூள் காணப்படும். வியாதி பரவ இவ்வித்தே காரணம்.
* தாக்கப்பட்ட இலைகளும், தண்டும் கருகி விடும்.

நோய் வேகமாகப் பரவும்பொழுது ஒரு வித நெடி வீசும்.

அனுபவ மிகுந்த விவசாயிகள் இந்நெடியின் மூலம் வியாதி பரவுவதை அறிந்து கொள்வார்கள்.

* கிழங்குகளிலும் கருஞ்சிவப்பு நிறம் தோன்றி அழுகத் தொடங்கும்.
* நோயுற்ற கிழங்குகளை வெட்டிப் பார்த்தால் கிழங்கு முழுதும் அழுகி, கருஞ்சிவப்பு நிறம் கொண்டிருக்கும்.
* மித சீதோஷ்ண நிலையில் தாக்கப்பட்ட கிழங்கு களின் மேல் இப்பூசணம் வெண்மையாக வளருவதையும் காணலாம்.

நோய் பரவக் காரணம் :—

* 12 முதல் 15 டிகிரி சென்டிகிரேட் சீதோஷ்ணநிலை, விடாமழை, குளிர்காற்று இந்நோய் எளிதில் பரவ முக்கிய காரணம்.
* நோயின் பூசண வித்துக்கள் 60 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணத்தில் அதிகமாக உற்பத்தியாகின்றன.
* ஜூலை மாதத்தில் தோன்றி ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இந்நோய் அதிகம்.

நோய் பரவும் விதம் :

* நோயுற்ற கிழங்குகளை விதைக்கு உபயோகிப்பதன் மூலம்.
* இலை, காம்புகளிலுள்ள பூசண வித்துக்கள் காற்று மூலம் பரவுகிறது.

மருந்தடித்தல்.

தடுப்பு முறைகள் :—

* நோய் தாக்காத நிலத்திலிருந்து விதைக்காக கிழங்குகள் எடுத்தல்.
* சேமித்து வைத்திருக்கும் கிழங்குகளை அடிக்கடி கவனித்து நோயுள்ள கிழங்குகளை அப்புறப் படுத்த வேண்டும்.
* வியாதி கிழங்குக்கு பரவாமலிருக்க அறுவடைக்கு முன் ஒரு சத போர்டோ கலவையைத் தெளித்து, நிலத்தின் மேலுள்ள இலை தண்டுகளை அப்புறப்படுத்திய 2, 3 வாரங் களுக்குப் பின் கிழங்கு அறுவடை செய்யுங் கள்.
* விதைத்த பயிரில் தடுப்பு முறையாக 40 நாட் களுக்குப் பின் ஒரு சத போர்டோ கலவை அல்லது தாமிர கலவை மருந்துகள் தெளிக் கலாம் அல்லது டைத்தேன் z 78 அல்லது டைத்தேன் எம். 22 அல்லது மேனப் (Maneb) ($1\frac{1}{2}$ ராத்தல் 100 காலன் நீரில் கரைத்து) தெளிக்க வேண்டும். தொடர்ந்து 8 அல்லது 10 நாட்களுக்கொரு முறை 4 அல்லது 5 தடவை தெளிக்கவேண்டும்.
* மழை, ஈரம் நிறைந்த சீதோஷ்ண நிலை முதலிய வற்றை முன் கூட்டி அறிந்து, தக்க சமயத்தில் மருந்து தெளிக்க வேண்டும்.
* விவசாய டிப்போவிலிருந்தோ, அத்தாட்சி பெற்ற வியாபாரிகளிடமிருந்து மட்டுமே தகுந்த மருந்துக்களைப் பெற்று உபயோகிக்க வேண்டும்.
* விவசாயிகள் ஒன்று சேர்ந்து, கட்டுப்பாடோடு, மூன்று அல்லது நான்கு வருடங்கள் தொடர்ந்து மருந்தடித்து வந்தால் வியாதியை முற்றிலும் அகற்றி விடலாம்.

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் எற்றுக்கொண்டதும்

(No. C. 1206691/61—14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள்

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினுல் செய்யப் பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாது காப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூஸ் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.

விலை விவரம்

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)



18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	290	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு	280	ரூபாய்

செயலாளர்கள்

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள்

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

நிலக்கடலையின் தேமல் நோய்

(ஜி. கௌசல்யா, டி. கே. கந்தசாமி, சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பூசண இயல் பிரிவு).

நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் நோய்களில் ''தேமல் நோய்'' முக்கியமானது. இது ஒரு வைரஸ் என்னும் கிருமியால் ஏற்படுகிறது. உடுமலைப்பேட்டையில் ''மருளை'' என்றும் இந்நோய் அழைக்கப்படுகிறது. கோவை, தென் ஆற்காடு, வட ஆற்காடு, திருச்சி, செங்கல்பட்டு மாவட்டங்களில் காணப்படுகிறது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பவானிசாகர், தாராபுரம், ஈரோடு, பவானி முதலிய இடங்களில் ஆண்டுதோறும் இந்நோய் காணப்பட்டு, 18 சதவிகிதம் வரை நிலக்கடலைப் பயிரை பாதித்திருக்கிறது. இவ்வாண்டு கோவை, தென் ஆற்காடு மாவட்டங்களில் 10 சதம் விளைச்சல் இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

நோயற்ற பயிரும், நோயுற்ற பயிரும்.

நோய் அறிகுறிகள் —

* பாதிக்கப்பட்ட செடி வளர்ச்சி குன்றி தென்படும்.
* கணுக்களின் இடைவெளி குறுகியிருக்கும்.
* இலைகள் சிறுத்து, வடிவு மாறி, சுருண்டும் காணப்படும்.
* இலைகளில் பச்சையும், மஞ்சள் கலந்த பச்சை நிறமும் மாறி மாறி தோன்றும்.
* தாக்கப்பட்ட செடிகளில் வேர்கள் குட்டையாகவும், வேர் முடிச்சுகள் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கும்.
* பூக்கள் குறைவாக தோன்றும், அத்தகைய பூக்களிலும் காய் பிடிக்காது.
* இந்நோய் பயிரில் ஒரு மாதத்திற்குள் தோன்றினுல் காய்ப் பிடிப்பு சிறிதுமிருக்காது.
* பிற்பகுதியில் காய்கள் குறைவாகவும் சிறுத்துமிருக்கும்.
* மகசூல் வெகுவாய் குறைந்துவிடும்.
* கொடியும் கொத்துக்கடலையும் இறைவையும், மானுவாரிப் பயிரும் பாதிக்கப்படுகிறது.

நோய் பரவும் விதம்.

* அசுவுனிப் பூச்சியால் பரவுகிறது.
* நோய் பற்றிய விரிவான ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

தடுப்பு முறைகள்.

* தாக்கப்பட்ட செடிகளை உடனுக்குடன் அப்புறப் படுத்தி எரித்து விடுங்கள்.
* நோய் பரவச் செய்யும் அசுவுனிப் பூச்சிகளை மருந்து அடித்து ஒழியுங்கள்.
* களைகளில்லாது பார்த்து வரவும்.
* காலத்தே பயிர் செய்யுங்கள்.
* தகுந்த இடைவெளி ,கொத்துக்கடலைக்கு வரிசையிலும், செடிக்கும் இடையே ஆறு அங்குலம் இடைவெளி தேவை.

இந்நோய் வராது தடுத்து நிலக்கடலை விளைச்சலை அதிகரித்து, அந்நியச் செலாவணியை அதிகரிக்க உதவுங்கள்.

இரசாயன உர தகவல் கருத்தரங்கு

தமிழ்நாடு உள்துறை, விவசாய அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் இரசாயன உர தகவல் கருத்தரங்கு, செயலரங்கை 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் தேதியன்று கோவை விவசாயக் கல்லூரியில் துவக்கி வைத்தார். இவ் விழாவிற்கு திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். வேளாண்மைத் துறை நெறிஞர் தலைமை வகித்தார். இக் கருத்தரங்கு, செயலரங்கு 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம்தேதியன்றும் தொடர்ந்து நடைபெற்றது. அமெரிக்க நிபுணர்கள் திரு மால்கம், திரு. ஸ்மித், வேளாண்மைக் கல்லூரி முதல்வர், வேளாண்மைத் துறை கூட்டு நெறியாளர்கள், துணை நெறியாளர்கள், விவசாயச் செய்தி அலுவலர், ஆராய்ச்சி நிபுணர்கள், தலைமை உரக் கட்டுப்பாடாளர், மாவட்ட விவசாய அலுவலர்கள், உரக் கலவை தயாரிக்கும் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். தமிழ் நாட்டு பயிர்களுக்கு மாவட்டங்களுக்கு ஏற்ற உர விகித சிபாரிசுகள் ஆராயப்பட்டு, முடிவு செய்யப்பட்டது.

உங்கள் பூமியும் பொன் விளையும் பூமியே

உங்கள் நிலத்திலிருந்து ஒவ்வொரு முறையும் அதிகப்படியான விளைச்சலைப் பெறுவதற்கு, போதுமான அளவு பாஸ்பேட் சத்தை அதற்கு அளிக்கவேண்டும். இந்த அத்தியாவசியமான பாஸ்பேட் சத்தை கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட் நிலத்திற்கு அளிக்கிறது. பயிர்களுக்கு போஷாக்கு அளிக்கவல்ல தாவர உணவுகள் நிரம்பிய இந்த உரம், வேர்களுக்கு பலமளித்து, பயிர்களின் நல்வளர்ச்சியை துரிதப்படுத்துவதன் மூலம் மகசூலைப் பன்மடங்கு பெருக்குகிறது.

உங்களுக்குத் தேவைப்பட்டால் 'கிரானுலேடட் உருவிலும் கோத்தாரி ஸுப்பர்பாஸ்பேட் கிடைக்கும். தோற்றத்தில் ரவை போன்ற இந்த உரம் கட்டிதட்டிப் போவதில்லை. ஆதலால் வெகு நாட்களுக்கு சேமித்து வைக்கலாம். உரத்தைத் தெளிக்கும்போது காற்றில் அடித்துக்கொண்டு செல்லும் காரணத்தினால் வீணாகாமல், உழவுகால்களில் நன்றாகத் தங்கி, வேர்ப்பாகங்களுக்கு எளிதில் கிடைக்கிறது.

கோத்தாரி NPK கலப்பு உரங்கள் பலதரப்பட்ட நிலங்களுக்கும் பயிர்களுக்கும் ஏற்ப, பிரத்தியேக விகிதங்களில் கிடைக்கிறது.

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட் மற்றும் **NPK கலப்பு உரங்கள்** உபயோகித்து உங்கள் மகசூலைப் பன்மடங்கு பெருக்குங்கள்.

தயாரிப்பாளர்கள் :
ப்ளூ மவுண்டன் எஸ்டேட்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ஓரியண்டல் பில்டிங்ஸ், அரமனைக்காரத் தெரு, மதராஸ்-1

KS
KOTHARI & SONS

IWT/KS/BM/2393

தமிழ்நாட்டில் பாக்கு மரங்களை தாக்கும் சில முக்கிய நோய்களும் அவைகளை தடுக்கும் முறையும்

[மா. மகாலிங்கம், M.SC. (Ag.), D.H. கமுகு அபிவிருத்தி திட்டம்.]

கமுகு மரங்களை தாக்கும் நோய்களில், "குலை அழுகல்" (Mahali) நோயும், "அடைப்பு காளான்" (Anabe or Ganoderma) நோயும், நம் மாநிலத்தில் மிகவும் முக்கிய மானவை. இந்நோய்கள் காணப்படும் இடங்களும், அவை களின் அறிகுறிகளும் (Symptoms) தடுப்பு முறைகளும், கீழே விரிவாக கூறப்பட்டுள்ளன.

1. குலை அழுகல் நோய் (Mahali or Koleroga)

இந்நோய் "பைட்டாப்தரா" (Phytopthora) வகையை சேர்ந்த ஒரு வகை காளானால் (Fungus) ஏற்படுகிறது.

காணப்படும் இடங்களும் காலங்களும்.—கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை காலத்திலும், கோயமுத்தூர் மாவட்டத்தில் (மேட்டுபாளையத்தில்) வட கிழக்கு பருவமழை காலத்திலும் பரவலாக காணப்படு கிறது.

அறிகுறிகள் (Symptoms)

(1) பாக்கு பழத்தின் அடிபாகத்தில் நீர் கசிந்த (Water soaked) பாகம் தோன்றும்.

(2) அது பரவியபின் பாக்கின் நிரம் கருத்து அது குலையிலிருந்து தனித்து விழும்.

(3) அவ்வாறு விழும் பழத்தின் தட்டு (Calyx) குலை யுடன் ஒட்டியிருக்கும்.

(4) நோய் அதிகமானல் இலைகளும் குலைகளும் உதிர்ந்துவிடும்.

தடுப்பு முறைகள் (Control measures)

இந்நோய் பாக்கு பழங்களை தாக்குவதால், இதனல் சில ஆண்டுகளில் 80% வரை சேதம் ஏற்படுகிறது. இந்நோயின் கடுமையும் (Intensity) அதன் பரவும் தன்மையும் பருவ மழையினல் ஏற்படும் சூழ்நிலையை பொறுத்திருப்பதால், இந்நோயின் அறிகுறிகள் தோன்றியபின் எடுக்கும் கட்டு பாடு முறைகளை (Control measures) காட்டிலும், தடுப்பு முறைகளே (Prophilactic measures) மிகவும் சிறந்தவை.

ஆதலால் பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு முறையும், பின் பருவகால மத்தியில் மழையில்லாத நாட்களில் மற்றொரு முறையும் 1% போர்டோ கலவையை (1% Bordeaux mixture) குலைகளுக்கு காய்களில் நன்ருக படும்படி தெளித்து இந்நோயை தடுக்கலாம்.

2. அடைப்பு காளான் நோய் (Anabe or Ganoderma)

" கேனேடெர்மா (Ganoderma) " வகையை சேர்ந்த காளானல் இந்நோய் ஏற்படுகிறது.

காணப்படும் இடங்கள்

இந்நோய் முக்கியமாக வடிகால் வசதி குறைந்த இடங் களில் காணப்படுகிறது. சேலம், கோயமுத்தூர் மாவட்டங் களில் இது காணப்படினும், சேலம் மாவட்டத்தில், போதிய நீர்பாசன வசதியில்லாத இடங்களில் அதிகமாக உள்ளது.

அறிகுறிகள்

இந்நோய் முதலில் வேர்களை பாதிப்பதால் இதன் அறி குறிகள் மரத்தின் இலைகள் காய்ந்து பின் மரமே பட்டு போகும் வரை வெளிப்படையாக ஒன்றும் தெரிவதில்லை. சில மரங்களின் அடிபாகத்தில் அடைப்பு காளான் (Ganoderma) வளர்வதை காணலாம்.

தடுப்பு முறைகள்

நோயின் அறிகுறிகள் மரம் பட்டுபோன பின்பு தான் தெரிகிறபடியால், நோயினல் பாதிக்கப்பட்ட மரங்களை காப்பாற்றமுடியாது.

ஆனல் இந்நோய் மற்ற மரங்களுக்கு பரவாமல் தடுக்க கீழ்காணும் முறைகளை கையாளவேண்டும்.

1. மழை காலங்களில் நீர் தேங்காமலிருக்கும் வடி கால்கள் அமைக்கவேண்டும்.

2. சரியான இடைக்காலம் விட்டு, அளவாக நீர்ப் பாய்ச்சுதல் நன்று. (Optimum irrgation at suitable intervals).

3. நோயினல் பாதிக்கப்பட்ட மரங்களை வேருடன் அகற்றி அக்குழிகளில் கந்தக தூளை (Sulphur dust) போட்டு மூடவேண்டும்.

4. சுற்றியுள்ள மரங்களுக்கு பரவாமல் இருக்க 1½"—2" அகலத்திற்கு, 1½"—2" ஆழத்திற்கு பாதிக்கப்பட்ட மரங்களைச் சுற்றிலும் குழிதோண்டி, அக்குழிகளில் கந்தக தூளை தூவி பின் மூடவேண்டும்.

— —

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 44425/63 தேதி 10—4—63 உத்தரவின்படி

1963-64 "ரேட் கான்ட்ராக்ட்" திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையழுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்–கோ.ஃ.பி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள்

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்-64.

தமிழ்நாடு, மைசூர் வினியோகஸ்தர்கள் :

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,
93, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு,
தபால் பெட்டி நெம்பர் 539, பெங்களூர்-2.

கழிவைக் கம்போஸ்டாக்கு

(பண்ணைச் செய்தியங்கம், விஸ்தரிப்பு இயக்குனரகம், புது தில்லி.)

இலாபத்தில் கண்ணுள்ள விவசாயிகள், கணிசமான மகசூலுக்கு சிக்கனமான வழி, கழிவை கம்போஸ்டு ஆக்குவது என்கின்றனர்.

சில கிராமத்தினர் கிராமக் கம்போஸ்ட்டு திடல் ஒன்றை அமைத்து அதில் கிராமத்துக்குத் தேவையான கம்போஸ்டை தயாரித்துக் கொள்கிறார்கள். வீட்டுக்கு வீடு அன்றாடம் சேரும் கழிவுகளை வீணாக்குவதில்லை. கோபால சமுத்திரம் கிராமத்தார்கள் இதை ஒரு தினசரிச் கடமையாகவே செய்து வருகின்றனர்.

கோபால சமுத்திரவாசிகள் தமக்குத் தேவையான கம்போஸ்ட்டை தாமே தயாரித்துக்கொள்கிறார்கள்.

"வீட்டுக்கு வீடு அன்றாடம் கழிவுத் தொட்டியில் சேருவதை தெருத் தொட்டிக்குள் கொட்டுவோம். வண்டி அன்றாடம் அதைச் சுமந்து கம்போஸ்டு தளத்துக்குச் செல்லும்", என்கிறார் அவ்வூர் விவசாயி.

இதோடு தழை, தோப்புக் கழிவுகள், சாக்கடை நீர் முதலியவையும் அங்கு கொண்டு சேர்க்கப்படுகின்றன. குப்பை கூளங்களை சேர்த்து வைத்தால் மட்டும் அவை தாமாக பலன் தரும் கம்போஸ்டாக ஆகி விடாது என்று அவ்வூர் விவசாயிகள் அறிந்துள்ளனர். "கழிவுகளை நாங்கள் உலரப் போட்டு அதன் நைட்ரஜன் சத்தை ஆவியாகப் போக விடுவதில்லை. அவ்வப்போது குழிகளில் இவைகளைச் சேர்த்து மூடி நைட்ரஜன் வீண் போகாமல் செய்கிறோம்" என்கிறார் அவர்.

கம்போஸ்ட் சத்துள்ளதாக இருக்க வேண்டுமானால் அவர்கள் கையாளும் கீழ்க்கண்ட பக்குவ முறையை பின்பற்ற வேண்டும்.

* உயரமான இடம் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; மழை பெய்தால் அங்கு தண்ணீர்த் தேக்கம் ஏற்படக்கூடாது.
* 15 அடி நீளம், 8 அடி அகலம், 3 அடி ஆழம் உள்ள குழிகள் தோண்ட வேண்டும். இந்தக் குழியில் 14 வண்டி கம்போஸ்ட் தயாரிக்க முடியும்.
* குழியின் நான்கு புறங்களையும் சுற்றி $1\frac{1}{2}$ அடி உயரம் சுவர் எழுப்பவும். இதனால் மழைத் தண்ணீர் குழியில் பாயாமல் இருக்கும். அதிக ஈரமிருந்தால் கம்போஸ்ட்டு பதம், பக்குவம் இரண்டையும் இழந்துவிடும்.
* குப்பை கூளங்கள், காய்ந்த சருகு, பசுந்தழை, சாணி இவைகளை அன்றாடம் குழியில் போடவேண்டும்.
* குழியை மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொன்றாக நிரப்புவது சிறந்தது.
* ஒவ்வொரு $\frac{3}{4}$ அடி உயரத்திற்கும் ஒருமுறை குழியில் 3 அங்குலம் உயரத்திற்கு மண்போட்டு மூடவேண்டும்.
* குழி நிரம்ப ஒரு மாதம் அல்லது $1\frac{1}{2}$ மாதம் பிடிக்கலாம்.
* குழி குவிந்தாற்போல் நிரம்பியதும் மண் சாணி இரண்டையும் கலந்து பூசி மூட வேண்டும்.
* முதல் மூன்று வாரம்வரை குழியை திறக்கக்கூடாது. மூன்று தடவைகள் தண்ணீர் விட வேண்டும். தண்ணீர் விடமட்டும் குழியைத் திறக்கலாம். குப்பைகூளங்கள் நனையும் அளவுக்குமட்டும் தண்ணீர் தெளிக்க வேண்டும். அதிக தண்ணீர் ஊற்றுவது தவறு. சாணியை கரைத்த தண்ணீரைத் தெளிப்பது சிறந்தது.
* 6—7 வாரங்களில் கம்போஸ்டு தயாராகிவிடும்.

இவ்வாறு தயாரிக்கப்படும் கம்போஸ்டில் நைட்ரஜன் அதிகமாக இருக்கும். பயிருக்கு மிகவும் ஏற்றது.

வளரும் மருதவனம்

கழனிக்குத் தழை இல்லை என்ற சொல் இல்லை

[ஆ. பழனியப்பன், பி.எஸ்ஸி. (விவசாயம்).]

மருதவனம் கிராமத்தின் சாகுபடிப் பரப்பு 617–12 எக்கரா. அதில் அத்தனையிலும் பசுந்தாள் உரப்பயிர்.

மருதவனம் கிராமம் தஞ்சை மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டை வட்டாரத்தைச் சேர்ந்தது. இக் கிராமம் 1960–61-ம் ஆண்டு எப்ரல் மாதத்திலிருந்து தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மருதவனம் கிராம மொத்த சாகுபடி பரப்பான சுமார் 617 எக்கரில், 1956-ல் 100 எக்கரில் காவாளை, பசலியும், 1957, 58, 59-ல் அதே அளவில் பசுந்தாளுரப் பயிரும் பயிரிட்டிருந்தார்கள். அதற்கு மேல் ஒருவரும் விதைக்க விரும்பவில்லை. காரணம் ? மாடு நிற்க இடம் இல்லை என்றனர் சிலர். விதைத்த வயல், விதைக்காத வயல் எல்லாம் விளைச்சலில் ஒன்றுய்த் தானிருக்கிறது, கிடை வைத்துக் கொண்டால் போகிறது என்று விட்டு விட்டார்கள். ஆனால் விளைந்தது மாவுக்கு 10–12 கலம்தான்.

1960–61-ல் தீவிர சாகுபடித் திட்டம் வந்த பிறகு, இடைவிடா முயற்சியின் மூலம் மூன்று எக்கர் உள்ளவர்களை குறைந்தது ஒரு எக்கராவாவது பில்லிபயறு அல்லது காவாளை, அவரவர் மண்ணுக்கேற்றவாறு விதைக்கும்படி எடுத்துக் கூறப்பட்டது. விவசாயிகளில் பெரும்பான்மையோர் இவ்வறிவுரையைப் பின்பற்றினர். பில்லிபயறு, காவாளை தெளித்த வயல்களில் மாவுக்கு 15 கலம் கண்டு முதல் செய்தனர். பசுந்தாள் இல்லாத வயல்களில், வெளியிலிருந்து தழை கொண்டு வந்து போட்டார்கள், கிடை வைத்தார்கள், எரு அடித்தார்கள், வண்டல் பரப்பினர், அப்படியிருந்தும் அங்கும் மாவுக்கு 15 கலம் தான் கண்டது. எரு அடித்தது, கிடை வைத்ததற்கான செலவுகள் ரூ. 35. ஆனால் பசலி, காவாளை பசுந்தாளுரப் பயிர் விதைக்க ரூ. 5. மட்டுமே செலவானது.

பசுந்தாளுரப் பயிரின் மேன்மையைப் பலரும் உணர்ந்தார்கள். 1956-ல் மருதவனத்தில் 100 எக்கராகயிருந்தது 1960–61-ல் 300 எக்கராகவும், 1961–62-ல் 500 ஆகவும், 62–63-ல் கிராமம் பூராவும் ஒற்றுமையாக விருந்து ஒரு காவல் போட்டு 617 எக்கரிலும் பசலி, காவாளை விதைத்து விட்டார்கள்.

இவ்வட்டாரத்தில் 1960–61-ல் தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட 8 கிராமங்களிலுள்ள 7,825 எக்கர்களிலும் முதல் வருடம் 3,000 எக்கர்களிலும் 2-ம் வருடம் 4,800 எக்கர்களிலும், மூன்றும் வருடமான 1962–63-ல் 6,500 எக்கர்களிலும் பசுந்தாளுரப் பயிர் விதைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வரிய சாதனையை ஏனைய கிராமங்களும் பின்பற்றி தழையுரம் பெருக்கி பயிர் வளம் பெருக்க வேண்டும்.

தந்தையைப்போல் தனயன்...



ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான வேற்றுமையே? ஆமாம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம்மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ருபாய், 4 ருபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS TREE BRAND FERTILIZERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

பஞ்சாயத்து செய்திகள்

நாட்டு எரு அபிவிருத்தியில் ஆர்வம்

ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், தலைவர், து. ரெங்கநாதபுரம் ஊராட்சி மன்றம்.

ரெங்கநாதபுரம் பஞ்சாயத்து, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முசிறி வட்டத்தில் துறையூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ளது. இப்பஞ்சாயத்து 1959-ம் ஆண்டு துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் 13 அங்கத்தினர்கள் உள்ளனர். இந்த பஞ்சாயத்தின் ஜனத்தொகை 1961-ம் ஆண்டு சென்ஸஸ்படி 2,038 பேர் ஆகும்.

நாட்டு எரு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உர அபிவிருத்தி ஆய்வாளர் அறிவுரைப்படி, 1961-ம் ஆண்டு எருக்குழி நிலையம் ஒன்று அமைக்க எங்களது பஞ்சாயத்து தீர்மானித்து அதற்குண்டான நீண்டகால அரசாங்கக் கடன் ரூ. 3,500 கேட்டுக் கொண்டோம். 20 ஆண்டுகளில் திரும்பக் கட்டும் தவணை முறையில் இத்தொகையை மாநில அரசாங்கம் முன்பணமாக வழங்கியது.

எருக்குழி நிலையம் திறப்பு விழாவில் கலந்து கொண்டோர்

மேற்படி முன்பணத்தின் உதவியைக் கொண்டு பஞ்சாயத்திற்குச் சொந்தமான சுமார் 80 சென்ட் பாழ் நிலத்தை பசுமை மிகு சோலையாக மாற்றி அவ்வப்போது உர அபிவிருத்தி ஆய்வாளரது அறிவுரைப்படி எரு தயாரிக்க முற்பட்டோம். 1961-62-ம் ஆண்டில் 115 டன் எருவும் 1962-63-ம் ஆண்டில் 125 டன் எருவும் உற்பத்தி செய்யப்பட்டது. 135 டன் எரு விற்கப்பட்டது. 1962-63-ம் ஆண்டில் எரு உற்பத்தியில் கிடைத்த வருமானம் ரூ. 380 இவ்வாண்டிற்குக் கட்ட வேண்டிய தவணைத்தொகை ரூ. 269 கட்டப்பட்டது. அதிக வருமானம் ரூ. 111 கிடைத்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் கிராம மக்கள் விவசாயத்தில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாய இலாகாவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தானிய விதைகளை விநியோகித்தும், நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டும் நல்ல பலன் பெற்று வருகின்றனர்.

இதுவரை பஞ்சாயத்து எருவின் சிறப்பை அறியாத விவசாயிகள் தற்பொழுது, குறிப்பாக இப் பஞ்சாயத்தின் எருவை ஒரு முறை உபயோகித்தோர் அதன் தரத்தை நன்குணர்ந்து, மேலும் உபயோகிக்க பெரிதும் முன் வருகின்றனர்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் ஜனவரி மாதத்தில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்

கிடைக்குமிடம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒன்றின் விலை. ரூ.	ந.பை.
தென்னை நாற்றங்கால்—			
சோழவந்தான், மதுரை ஜில்லா.	2,000	0	65
பட்டுக்கோட்டை, தஞ்சை ஜில்லா.	15,000	0	65
திண்டிவனம், தென்னாற்காடு ஜில்லா.	3,000	0	65
மாயவரம், தஞ்சை ஜில்லா.	3,000	0	65

கால் நடை நோய்கள் - முன்னறிவிப்பு

தொண்டை அடைப்பான் : இந்நோய் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தஞ்சாவூர், தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் தோன்றக்கூடும்.

சப்பை நோய் : 1964-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் திருநெல்வேலி, இராமநாதபுரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தோன்றக்கூடும்.

(தமிழ்நாடு கால் நடை பராமரிப்புத்துறை.)

பயன் தரும் பயறுகள் பயிரிடுங்கள்

விவசாயச் செய்திக் கதிர்

எம். காசிவிஸ்வநாதன், டி. ரகோத்தமராவ், விரிவினைப் பிரிவு, கோவை.

குசும்பா—குறைந்த மழையுள்ள பிரதேசத்துக்கான எண்ணெய் வித்துப் பயிர்.

* 'குசும்பா' மானாவாரிப் பயிராக தென் மாவட்டங்களில் அக்டோபர்—நவம்பர் மாதங்களில் சாகுபடி செய்வதற்கேற்றது.

* தனிப்பயிராகவும், கடலைப்பயறு, பருத்தி, கொத்துமல்லி ஆகியவற்றுடன் கலப்புப் பயிராகவும் பருத்தி, மிளகாய் வயல்களில் வரப்போரப் பயிராகவும் பயிரிடலாம்.

* குசும்பா எண்ணெய்யை சமையல் பதார்த்தங்கள் செய்வதற்கு உபயோகப்படுத்தலாம்.

* உரித்த விதையினின்றும் கிடைக்கும் பிண்ணாக்கு நல்ல சத்து மிக்கது ; 45 சதவீதம் புரதச்சத்துடையது.

* விதை எடுத்ததும் உலர்ந்த செடியின் பாகங்களை எரித்து அதன் சாம்பலை நிலத்திற்கு இடலாம்.

எள்ளுப் பயிரில் பயிர்ப்பாதுகாப்பு.

(1) **எள்ளுக்காய்ப்புழு.**—சிறிய பச்சைநிறமுள்ள இப்புழு இளம் இலைகளை ஒன்று சேர்த்துப் பின்னி இளம் இலைகளைத் தின்றும், காய்கள், தண்டு ஆகியவற்றைத் துளைத்தும் செடிக்குச் சேதம் விளைவிக்கிறது. இதன் அந்துப் பூச்சி மஞ்சள் பழுப்பு நிறமுடையது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த டி.டி.டீ. 5 சதவீத தூளை ஏக்கருக்கு 15—20 ராத்தல் வரை தூவவும் அல்லது 50 சதவீதம் டி.டி.டீ. நீரில் கரையும் தூள் ஒரு ராத்தலை 50 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

(2) **எள்ளுக்காய் வீக்கம் உண்டாக்கும் ஈ.**—கொசுவைப் போன்ற இப்பூச்சியின் புழுக்கள் மலர் மொட்டுக்களைத் துளைத்துச் சென்று சேதமுண்டாக்குகிறது. தாக்கப்பட்ட மொட்டுக்களிலிருந்து வரும் காய்களில் வீக்கம் காணப்படுகிறது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்துவது கடினம். இதன் தாக்குதல் செடிக்குச் செடி பரவுவதைத் தடுக்க வீக்கமுள்ள காய்களை அவ்வப்போது அகற்றி அவற்றை எரித்துவிட வேண்டும்.

(3) **சாம்பல் நோய்.**—இந்நோயால் தாக்கப்பட்ட செடிகளின் இலைகளின்மேல் மாவு போன்ற படிவு காணப்படும். சில சமயத்தில் தாக்கப்பட்ட இலைகள் உதிர்ந்து விடுகின்றன. கந்தகத் தூளைத் தூவியோ அல்லது நீரில் கரையும் கந்தகத்தூள் அல்லது சுண்ணாம்பு கந்தகத் தூளைத் தெளித்தோ இவ் வியாதியைக் கட்டுப்படுத்தலாம்.

வெண்டையைத் துளைக்கும் புழுவை ஒழித்து மகசூலை அதிகரியுங்கள் !

* இப்புழு வெண்டைச் செடியையும் காய்களையும் துளைக்கிறது.

* இதைக் கட்டுப்படுத்த 20 சதவீதம் என்டிரின் மருந்தை (ஒரு அவுன்சு மருந்தை $6\frac{1}{4}$ காலன் நீரில் கலந்து) விதைத்த இரண்டாவது வாரத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறையாக மூன்று முறை தெளிக்கவேண்டும்.

* இதனால் தத்துப் பூச்சி, பேன் முதலியவையும் அழிக்கப்படுகின்றன.

* செடியின் வளர்ச்சியையும் அதிகரிக்கிறது.

* காய்கள் தோன்ற ஆரம்பித்ததும் மருந்தடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

சர்க்கரை வள்ளி மூக்குவண்டு

எறும்பைப் போன்றிருக்கும் இவ்வண்டின் புழுக்கள் சர்க்கரை வள்ளிக் கொடியின் தண்டையும் கிழங்கையும் துளைத்து சேதம் விளைவிக்கிறது. வயலில் காணும் இப்பூச்சி சேமித்து வைக்கும் கிழங்கிலும் காணப்படுகிறது. தாக்கப்பட்ட கிழங்கின்மேல் கருப்பான பாகங்களும், துவாரங்களும் காணப்படும். எல்லா ரகங்களும் இப்பூச்சியால் தாக்கப்படுகின்றன.

* இப் பூச்சியால் தாக்கப்படாத கொடிகளையே நடவிற்கு உபயோகிக்க வேண்டும்.

* பூச்சி காணப்படும் வயலிலுள்ள பயிரை அறுவடை செய்ததும் கிழங்கு போக செடியில் மற்ற பாகங்களை எரித்து அழித்துவிடவேண்டும்.

* இப் பூச்சியைக் கட்டுப்படுத்த ஒரு சதவீத என்டிரின் தூள் அல்லது 1.5 சதவீதம் டயல்டிரின் தூளை ஏக்கருக்கு இரண்டு ராத்தல் வீதம் தூவ வேண்டும் அல்லது 0.2 சதவீதம் என்டிரின் அல்லது 0.1 சதவீதம் டயல்டிரின் மருந்தை கிழங்கு தோன்ற ஆரம்பிக்கும் சமயத்திலிருந்து மூன்று வாரத்திற்கொரு முறையாக மும்முறை தெளித்தும் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்கலாம்.

மார்கழி—தை மாத விவசாயக் குறிப்புகள்

(விவசாயச் செய்தி நிலையம்)

நெல் :

* நவரைப் பயிருக்கு நாற்றங்கால் தயாரியுங்கள்.

* நடவாயிருந்தால் முதல் முறை 75 ராத்தல் கால்சியம் அமோனியம் நைட்ரேட் இடுங்கள்.

* பின்பட்ட சம்பா அறுவடை.

* விதையை கவனமாகச் சேகரித்து வையுங்கள்.

[24-ம் பக்கம் பார்க்கவும்]

எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற "குறுகிய கால மொச்சை" D. L. 3196

(R. சம்பந்தம், K. மீனுக்ஷி, R. சுந்தரேசன், பயறு வகை ஆராய்ச்சிப் பிரிவு, கோயம்புத்தூர்.)

* கோவை பயறு வகை ஆராய்ச்சிப் பண்ணையில் தென்காசி வட்டாரத்திலிருந்து கிடைத்த மொச்சையில் ஓர் புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

* சாதாரணமாக, மொச்சை ஆடி-ஆவணியில் விதைக்கப்பட்டு, தை-மாசி மாதங்களில் அறுவடைக்கு வருகிறது. ஆனல் இப்புதிய ரகத்தை எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம்.

* இது ஒரு $3\frac{1}{2}$–4 மாதப் பயிர்.

* எப்பருவத்தில் விதைத்தாலும் விதைத்து, 35–40 நாட்களில் பூக்க ஆரம்பிக்கிறது. பூத்து 10–15 நாட்களில் முற்றிய மொச்சைக் காய்களிலிருந்து பச்சை மொச்சைப் பயறு எடுக்கலாம் அல்லது நன்கு உலர்ந்த பின் மொச்சைப் பயறு எடுக்கலாம்.



* இதன் செடிகள் அதிகம் படராமல் குத்தாக நிற்கக் கூடியவை.

* செடிக்குச் செடி 6" இடைவெளியும் வரிசைகளுக்கு இடையே 1' இடைவெளியும் இருந்தால் போதுமானது.

* தனிப் பயிராகப் பயிரிட்டால் ஏக்கருக்கு 350–400 ராத்தல் மொச்சை கிடைக்கும்.

* செடிகள் அதிகம் படராதிருப்பதால் இதனை ராகி, கடலை (குத்து ரகம்) முதலியவைகளுடனும் கலப்புப் பயிராகப் பயிரிடலாம்.

எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற இந்த குறுகியகால மொச்சை ரகத்தை விவசாயிகள் அனைவரும் பயிர் செய்து பயனடைவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

[23-ம் பக்கம் தொடர்ச்சி.]

சிறுதானியங்களும், பயறுவகைகளும் :

* பின் விதைத்த துவரை அறுவடை செய்யுங்கள்.
* கோடை சோள விதைப்பிற்கு நிலம் தயாரியுங்கள்.
* கம்பு விதைப்புக்கு ஏற்ற காலம்.

பருத்தி :

* பருத்திக்கு தொடர்ந்து மருந்தடியுங்கள்.
* பஞ்சு எடுக்கும் பருவம். சுத்தமான பஞ்சையும் அழுக்குப் பஞ்சையும் தனித்தனியே எடுத்து, சேமித்து வையுங்கள்.
* மாசிப்பட்ட பருத்திக்கு நிலம் தயாரியுங்கள்.
* திருச்சி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பி. 216F பருத்தி, அக்ரோசான மருந்து கலந்து தெளியுங்கள்.

எண்ணெய் வித்து :

* அறுவடையான மானாவாரி கடலையைக் காய வைத்து, சாக்குகளிலடையுங்கள்.
* இறைவை நிலக்கடலை தொடர்ந்து விதையுங்கள். முன்னதாக விதைத்த இடங்களில் முதல் முறைகளை எடுங்கள்.
* கோடை எள் விதையுங்கள்.
* முதிர்ந்த ஆமணக்கு முத்து சேகரியுங்கள்.
* தென்னை தோப்புகளில் ஊடுபயிர் செய்யுங்கள். மழையில்லையேல் தண்ணீர் பாய்ச்சுங்கள்.

பழவகைகளும், காய்கறிகளும் :

* திராக்ஷை நடவு, கவாத்து செய்து, மருந்தடித்து உரமிடுங்கள்.
* கோடை கால காய்கறிகளுக்கு நிலம் தயார் செய்யுங்கள்.

உங்கள் நெற்பயிருக்கு

பொட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை

[எஸ். ராஜரத்தினம், சி. ரங்கநாதன், விவசாயக் காலநிலை ஆய்வுப்பிரிவு, கோயம்புத்தூர்-3.]

இம் மாதம் முதல் தேதியில் தமிழகமெங்கிலும் இடியுடன் கூடிய கனத்த மழை ஆங்காங்கு பெய்தது. தொடர்ந்து இரு நாட்களில் சிற்சில இடங்களிலும், மறு நாள் ஆங்காங்கும் மழையிருந்தது. மீண்டும் 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் தேதி முதல் 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதி வரை தமிழகத்தின் சில பகுதிகளில் லேசான மாரியிருந்தது. மாருக தொடர்ந்து இரண்டு நாட்கள் தமிழகத்தில் வறட்சி நிலவியது. அடுத்த இரு நாட்களில் சில இடங்களில் மழையிருந்தது. பின்னர் மூன்று நாட்கள் பொதுவான வறட்சியே நிலவியது. 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் தேதி முதல் 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி வரையிலும் சிற்சில இடங்களில் மழையிருந்தது. ஆனல் 22-ம் தேதி மட்டிலும் ஆங்காங்கு பெருமழை பெய்தது. பின்னர் இம்மாதம் முடியும் வரை தமிழகத்தில் சில இடங்களில் சிறிது மழையும் ஆங்காங்கு இடியுடன்கூடிய பெருமழையும் இருந்தன. இம்மாதம் பகல் வெப்பநிலை எல்லா நாட்களிலும் சீராகவேயிருந்தது.

காலநிலையும் பயிர்வளர்ச்சியும் :—செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் சற்று அதிகமான மழையிருந்தது. இம் மழையால் நெல், நிலக்கடலை, கரும்பு, சோளம் முதலிய பயிர்கள் பயனடைந்தன. சம்பா நெல் நடவுக்கும் இம்மழை உதவி புரிந்தது. இப்பகுதிகளில் நெற்பயிரில் நாவாய் பூச்சிகள் பெருமளவு தாக்கின. தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமாரான மழையேயிருந்தது.

இம்மழையால் சம்பா, குறுவை நெற்பயிர்கள் பெரிதும் பயனடைந்தன. மன்னார்குடி பகுதிகளில் மழை மிகவும் குறைவு. மேட்டூர் நீர்தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்ததினல் பாசனத்திற்கு மிகவும் கடினமாயிற்று. நீர் பற்ருக் குறையினல் விவசாயிகள் முறைபோட்டு நீர்ப்பாய்ச்ச நேர்ந்தது. சம்பா நெல் நடவுக்கு தாமதமாயிற்று. சில பகுதிகளில் உழுது பண்படுத்திய நிலங்கள் மழையின்மையால் வறண்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இம்மாதம் மழை அதிகமாக இருந்தது. இம்மழையால் நெல், கரும்பு, மிளகாய், பருத்தி, கடலை மற்றும் சிறுதானியம் பயிர்கள் பெரிதும் பயனடைந்தன. இம்மாவட்டத்தில் நெற்பயிரை நாவாய் பூச்சிகளும் திரிப்ஸும் சிறிதளவு தாக்கின.

இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் சுமாராகவே மழையிருந்திருக்கிறது. இச்சிறிது மழையினல் கம்பு, சோளம், கடலை, உளுந்து மற்றும் சிறுதானிய வகைகள் விதைக்கப்பட்டன. சிவகங்கை பகுதிகளில் நிலக்கடலைப் பயிரில் சிவப்பு கம்பளிப் பூச்சிகள் வெகுவாக காணப்பட்டன. கன்னியாகுமரி, மதுரை மாவட்டங்களில் மழை போதிய அளவு பெய்யவில்லை. உசிலம்பட்டி பகுதிகளில் பெய்த மழையினல் பருத்தி, தானிய வகைகள் முதலியன விதைக்கப்பட்டன. இங்குள்ள நிலக்கடலைப் பயிர்களில் சிவப்பு கம்பளிப் பூச்சிகள் காணப்பட்டன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் போதியளவு மழை இல்லை. மழையின்மையால் சோளம் மற்றும் சிறு தானியங்கள் விதைக்க தாமதமாயிற்று. அன்னூர், கோவில் பாளையம், பெரிய நாய்க்கன் பாளையம் பகுதிகளில் இம்மழையின் உதவியினல் பருத்தி விதைக்கப்பட்டது. ஆனைமலை வட்டாரத்தில் நெல் அறுவடைக்கு வந்தது. நாவாய் பூச்சிகளும் பேனும் நெற்பயிரை தாக்கின. பரம்பிக்குளம், ஆளியார் நீர்த்தேக்கத்திலிருந்து இம்மாதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அதனல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் "கம்போடியா" பருத்தி விதைக்கப்பட்டது. இப்பகுதிகளில் பருத்தியை இலைப்பேனும், நாவாய் பூச்சிகளும், மிளகாயை திரிப்ஸும், கத்தரி செடியை தண்டு துளைப்பானும் (Shoot Borer) பெருமளவு தாக்கின. அவிநாசி பகுதிகளில் நிலக்கடலையை சிவப்பு கம்பளி பூச்சிகள் தாக்கின. சேலம் மாவட்டத்தில் மழை மிகவும் குறைவு. போதிய மழையின்மையால் கடலை மற்றும் சிறுதானியப் பயிர்கள் வாட்டமுற்றன. ஆமணக்கை கொக்கிப் புழுக்கள் பெருமளவில் தாக்கின.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த சிறிது மழையும் உருளைக் கிழங்கு மற்றும் காய்கறி தோட்டப் பயிர்களுக்கும் ஏற்றதாயிற்று. இங்கு சிற்சில பகுதிகளில் கிழங்கு அழுகல் நோய் வெகுவாகக் காணப்பட்டன.

இம்மாதத்தில் குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

தேதி. (1)	இடத்தின் பெயர். (2)	மழையளவு. (3)
1-9-63	வேலூர்	3·19
12-9-63	திரூர்	3·10
19-9-63	திருச்சிராப்பள்ளி	4·65
26-9-63	ஆடுதுறை	3·02
27-9-63	திண்டிவனம்	4·44

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர். (1)	செப்டம்பர் மாத மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	குறிப்பு. (4)
வடபிராந்தியம்	8·2	+2·6	அதிகம்.
கீழ்கரை பிராந்தியம்	4·5	+0·2	அதிகம்.
மத்திய பிராந்தியம்	3·1	..	..
தென் பிராந்தியம்	1·1	—0·9	குறைவு.
மலைப் பிராந்தியம்	7·5	+2·1	அதிகம்.

1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதக் காலநிலை அறிக்கை

மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர். (1)	இம்மாத மொத்த மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை அளவு. (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்)	4·4	—0·3	21·4
திரூர்குப்பம் *	7·3	+1·8	23·3
வேலூர்	13·2	+6·3	28·4
குடியாத்தம் *	8·0	2·4	24·1
கீழ்க்கரை பிராந்தியம்			
பாலூர் *	2·7	—2·0	25·0
திண்டிவனம் * ..	8 2	+4·0	37·7
கடலூர்	3 9	—1·3	23·1
நாகப்பட்டினம் ..	3·4	+0·1	19.5
ஆடுதுறை *	6 7	+1·4	25·6
பட்டுக்கோட்டை * ..	2·3	—1·2	22·4
மத்திய பிராந்தியம்			
சேலம்	2·9	—3 2	23·0
கோயம்புத்தூர் * ..	0·8	—0.1	9·0
கோயம்புத்தூர் ..	0·8	—0 1	7·2
திருச்சிராப்பள்ளி ..	8 0	+4 0	13·7
தென் பிராந்தியம்			
மதுரை	2·8	—1·9	20·3
பாம்பன்	இல்லை	—1·1	14·5
கோவில்பட்டி *	1·8	—0·3	16·7
பாளையங்கோட்டை ..	1·3	+0·1	22·5
அம்பாசமுத்திரம் * ..	0·7	—0·3	27·7
நாகர்கோவில் * ..	0·6	—1·6	27·2
கன்னியாகுமரி * ..	0·4	—0·9	27·1
மலை பிராந்தியம்			
கொடைக்கானல் ..	9·6	+2·3	43·1
கூனூர் *	7·0	+1·8	35·0
உதகமண்டலம் * ..	6·4	+2·4	31·5
நஞ்சநாடு *	7·1	+1·8	46·4

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

மேழிச் செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

———

1964 ஜனவரி மாதத்தோடு முடிவாகும் "மேழிச் செல்வம்" மாத இதழ் சந்தாதாரர்களின் சந்தா எண், மாவட்ட ரீதியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டம்.	சந்தா எண் ஆரம்பம்.	முடிவு.
செங்கல்பட்டு	2572	2744
தென் ஆற்காடு	4101	4286
வட ஆற்காடு	8359	8416
தஞ்சாவூர்	8800	8958
திருச்சி	6585	6699
சேலம்	4745	4899
மதுரை	2019	2181
கோயமுத்தூர்	2020	2338
இராமநாதபுரம்	1639	1751
திருநெல்வேலி	6127	6497
நீலகிரி	5178	..
கன்னியாகுமரி	1213	1228
உள்ளூர் சந்தா	2236	2250

மேழிச் செல்வம் தொடர்ந்து பெற உடனடியாக சந்தா தொகையாகிய ரூ. 3 (மூன்று மட்டும்) அருகி லுள்ள விவசாய அலுவலகத்திலாவது அல்லது பணத்தை மணியார்டர் மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பியாவது புதுப்பித்துக் கொள்ளுங்கள். **புதுப்பிக்கும்போது தவறுமல் சந்தா எண்ணை அதில் குறிப்பிடவும்.** உங்கள் நண்பர் களையும் சந்தாதாரர்களாக்குங்கள்.

வேளாண்மைத்துறை நெறியாளர்,
தபால்பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை–5.

சந்தா விவரம் :—

	ரூ.	ந.பை.
தனிப்பிரதி விலை	0	25
சித்திரை மலர்	0	50
ஆண்டு சந்தா	3	00

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் சந்தா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேல்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும்.

ஆல் இண்டியா ரேடியோ: திருச்சிராப்பள்ளி

1963 டிசம்பர் மாதத்திய கிராம நிகழ்ச்சி நிரல்.

ஞாயிறு (1—12—63)

கிராம சிறுவர்கள்
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராமம் போவோமே—செய்தி சித்திரம்.

திங்கள் (2—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
தேவாரம்.
விஞ்ஞானகூடம்—நிலக்கரியும் அதன் உபயோகமும்
விலேவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
ஆயிரம் விளக்கு—சித்திரம்.

செவ்வாய் (3—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊர்சசாவடி.
அறிவிப்புக்கள்.
படப் பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சிகள்—
1. கேள்வி—பதில்.
2. சிறந்த மிருகங்களின் தோல் உரிப்பு நிலையங்களும், அவற்றின் நன்மைகளும்.

புதன் (4—12—63)

திருவாசகம்.
ஊாசசாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
சுகாதாரக் கேடு—துப்புதல்.
சரித்திர கதைகள்—புகழ்பெற்ற போர். விரதம் கொண்ட வெற்றி.

வியாழன் (5—12—63)

மெல்லிசை.
ஊாசசாவடி.
அறிவிபபுகள்.
பக்திபபாடல்.
திருக்குறள் விளக்கம்.
நமது திட்டம்—நம் நாட்டில் பட்டுத் தொழில்.
செயதி விளக்கம்.

வெள்ளி (6—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊாசசாவடி— தேசிய கொடி தினம்.
அறிவிப்புகள்.
படப் பாட்டுக்கள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி— பதில்
2. பால் பெருக்கத் திட்டங்கள்.

சனி (7—12—63)

மெல்லிசை.
ஊாசசாவடி.
அறிவிப்புகள்.
கால்நடைகளுக்கான தீவனம்—கன்றுகளுக்கு.
பக்திப்பாடல்.
நம் மாதர் மன்றம்—
1 பிரசவித்த தாயின் பாரமரிட்பு.
2. சதய நெறி.
3. நாட்டுபபாடல் பயிற்சி.

ஞாயிறு (8—12—63)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
நம் நாட்டு விவசாயி—கடிதம்.
கிராம சாவடியில் பொன் ஆஞ்ஞான் வழக்கு விசாரணே (தனஞ்செயன்).

திங்கள் (9—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருப்புகழ்.
விஞ்ஞானக்கூடம்—எண்ணெயும் அதன் பயனும்.
விலேவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
பேப்பர் பிட் பெரியசாமி—சித்திரம்.

செவ்வாய் (10—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாடுக்கள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. யானேக்கால் நோய்.

புதன் (11—12—63)

பாசுரம்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
சுகாதாரக் கேடு—அசிங்கம் செய்தல்.
சரித்திரக் கதைகள்—புகழ்பெற்ற போர். தேனும் திரவியமும்.

வியாழன் (12—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
பக்திப் பாடல்.
நமது திடடம்—இஸத் நகர் கால்நடை வைத்திய நிலேயம்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (13—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊர்சசாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. நம் இரண்டாம் பாதுகாப்புப் படை—பாதுகாப்பு அணி

சனி (14—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
கால்நடைகளுக்கான தீவனம்—கறவை மாடுகளுக்கு.
பகதிப்பாடல.
நம் மாதர் மன்றம்—
1. எங்கள் கிராமத்தில்.
2. சத்ய நெறி.
3. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (15—12—63)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப் கள்.
மெல்லிசை.
கரும்பைத் தாக்கும் நோய்கள்.
கிராமிய கலே.
நையாண்டி மேளம்.

திங்கள் (16—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.

சித்தர் பாடல்.
விஞ்ஞானகூடம்—நீராவியும் அதன் ஆற்றலும்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
ஊருக்கு ஒருவர்—நாடகம்.

செவ்வாய் (17—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. புதிய கூட்டுறவு சட்டங்கள்.

புதன் (18—12—63)

திருப்புகழ்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
ஆரோக்கிய கேடு—நீர் நிலையை அசுத்தம் செய்தல்
சரித்திரக் கதைகள்—புகழ்பெற்ற பார்.
கோண எழுத்து குஞ்சிதபாதம்—சித்திரம்.

வியாழன் (19—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
பக்திப்பாடல்.
நமது திட்டம்—மூன்றாவது திட்டத்தில் கிராம முன்னேற்றம்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (20—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுக்கள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. நம் இரண்டாம் பாதுகாப்புப் படை—கிராமத் தொண்டர் அணி.

சனி (21—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
கால்நடைகளுக்கான தீவனம்—உழைக்கும் காளைகளுக்கு
பக்திபாடல்.
நம் மாதர் மன்றம்—
1. மாதர் அணி.
2. சத்திய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (22—12—63)

கிராம சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
பாதாம் மரம் பயிரிடல்.
கிராம முன்னேற்றம்.
நாட்டுப் பாடல்கள்.

திங்கள் (23—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவுப்புகள்.
பாசுரம்
விஞ்ஞானக்கூடம்—எப்படி மோட்டார் கார் இயங்குகிறது ?
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
பழிக்குப்பழி—நாடகம்.

செவ்வாய் (24—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுக்கள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. கரும்பு ஆராய்ச்சி குறிப்புகள்.

புதன் (25—12—63)

சித்தர் பாடல்.
ஊர்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
சுகாதாரக் கேடு—குப்பைகளைக் கொட்டுதல்.
செய்தித்தாள்.
புனிதத் திருநாள்—கிறிஸ்து ஜனனம் பற்றிய சித்திரம்.

வியாழன் (26—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புக்கள்.
திருக்குறள் விளக்கம்.
பக்திப் பாடல்.
நமது சாதனம்.
செய்தி விமர்சனம்.

வெள்ளி (27—12—63)

தேசபக்திப் பாடல்
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுக்கள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. தொழில்—பேட்டைகள்.

சனி (28—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புக்கள்.
கோழிக்குஞ்சு பராமரிப்பு.
நம் மாதர் மன்றம்—
1. ஆப்பக்கார அங்காயி,
2. சத்திய நெறி.
3. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (29—12—63)

ஸ்பெஷல் நாடகம்.

திங்கள் (30—12—63)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புக்கள்.
அருட்பா.
விஞ்ஞானக்கூடம்—ரயில் எப்படி ஓடுகிறது ?
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
வளரும் தமிழகம்.

செவ்வாய் (31—12—63)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புக்கள்.
படப் பாட்டுக்கள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. சிறந்த கோழிப்பண்ணை.

விவசாயத் துறை செய்திகள்

தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் சூப்பர் பாஸ்பேட், இரசாயன உரக் கலவைகள் வாங்க கடன் வசதி.

தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்தும் பெறலாம்.—தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் சூப்பர் பாஸ்பேட், இரசாயன உரக் கலவைகள் வாங்க கடன் வசதி அரசாங்கத்தால் அளிக்கப்படுகின்றன. தற்பொழுது இக் கடன் வசதி சீட்டு கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு, சூப்பர், இரசாயன உரக்கலவைகள் அங்கிருந்து மட்டுமே விவசாயிகளால் பெற முடிகின்றன. ஆனால் இவ் வசதி தற்பொழுது "சூப்பர், இரசாயன உரக்கலவைகளைப் பொறுத்த மட்டில்" தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்தும் பெற அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. ஆனால் இது கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டிருக்க வேண்டும்.

(1) "முழுக் கடன் வசதித் திட்டம்".—அமுலிலுள்ள (Full Finance Schedule) இடங்களில் தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. அவ்விடங்களில் கூட்டுறவு சங்கங்கள் இருப்பு வைக்காத அல்லது அரசினர் விற்பனை திட்டத்தின் கீழ் நியோகிக்கப்படாத இரசாயன உரக் கலவைகளை வாங்க விரும்பும் விவசாயிகள் "பணமாகக் கடன் பெற்று" தங்களது உரக் கலவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

(2) "முழுக் கடன் வசதி திட்டம்" அமுலில்லாத இடங்களில் இக் கடன் வசதிச் சீட்டுக்கள் அங்குள்ள கூட்டுறவு சங்கங்களிடம் இரசாயன உரக் கலவைகள், சூப்பர் இல்லாதிருந்தால் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

(அரசாங்க ஆணை எண் 3237, உணவு-விவசாயத் துறை தேதி 29-10-63.)

தமிழ்நாட்டில் மின்சாரம்

1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி மின்சார வசதி பெற்றிருந்த நகரங்கள்; கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 15,745; மின்சாரத்தினால் இயங்கும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 1,75,654.

(தமிழ்நாடு செய்தித் துறை)

"வைரஸ்" கிருமி தாக்கப்படாத உருளைக் கிழங்கு விதை உற்பத்தி செய்தல்

நீலகிரி மாவட்டத்தில் "வைரஸ் கிருமி" தாக்கப்படாத உருளைக்கிழங்கு விதை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசாங்கம் ஒரு திட்டத்தை அமுல் நடத்த ஒப்புறுதியளித்திருக்கிறது.

இவ் விதைப் பண்ணை உதகமண்டலத்திலுள்ள அரசாங்க சிங்கோனா தோட்டத்தில் ஒரு பகுதியில் 50 ஏக்கர்களில் ஆரம்பிக்கப்படும். ஐந்து வருடங்கள் இத்திட்டம் அமுல் நடத்தப்படும்.

முதல் ஆறு மாதத்தில் "வைரஸ் கிருமி" இல்லாத ஆதார விதைகளை உற்பத்தி செய்யக் கொழும்பு திட்டத்தின் கீழ் பணியாற்றும், பிரிட்டிஷ் உருளைக்கிழங்கு நிபுணர் திரு. டாடு அவர்களின் சேவை பயன்படுத்தப்படும்.

இத் திட்டத்தை நடத்த ஒரு உதவி பயிர் பூசண நிபுணர் இதர உதவியாளர்களும் நியமிக்கப்படுவார்கள்.

(அரசாங்க ஆணை 3286, உணவு-விவசாயத் துறை தேதி 2-11-1963-)

கடைசி அட்டைப்படம்

திறன் வாய்ந்த தானியம் "சுத்தம் செய்யும் எந்திரம்"

* 96 சதவீதம் வரை சுத்தமாகப் பிரித்தெடுக்கும்.
* மணிக்கு 25 டன் தானியம் பிரித்தெடுக்கும் சக்தி வாய்ந்தது.
* முதலில் சுழற்சி வேகத்தால் அழுக்கு, தும்பு, தூசி, களை விதைகள், மற்றும் ஜல்லடை கண்களை விட சிறிய பொருள்களெல்லாம் பிரித்தெடுக்கப்படுகின்றன.
* பின் காற்று ஊதிகளின் காற்று வேகத்தால் இன்னும் இலேசான பொருள்கள் காற்றின் மூலம் வெளியே அடித்துச் செல்லப்பட்டு சுத்தமான தானியங்கள் பிரிக்கப்படுகின்றன.
* தானே தானியத்தை உள்ளே இழுத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்தது.
* வெவ்வேறு பருமனுள்ள தானியங்களை எந்திரத்தை கழட்டாமலே பிரித்தெடுக்கலாம்.
* இக்கருவி விதைகளை தரம் பிரிக்கவும், மருந்து கலப்பதற்கும் ஏற்றது.
* முதல் தரமான மாதிரிகள் கிடைக்கும்.
* இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டு தேசீய விவசாய பொறியியல் கழகத்தால் பரிசோதனை செய்யப்பட்டது.



20—10—63 அன்று கோவை பருத்தி ஆராய்ச்சிப் பண்ணையில் "வீ ஐலண்டு ஆண்ட்ரூஸ்" நீண்ட இழைப் பருத்தியை ஆராய்ச்சியாளர்களுடன் விவசாயத்துறை நெறியாளர் பார்வையிடுதல்.



பருத்தி நிபுணருடன் விவசாயத்துறை நெறியாளர்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963



திறன்வாய்ந்த தானியம் " சுத்தம் செய்யும் எந்திரம் " இதர குறிப்புகளுக்கு 30-ம் பக்கம் பார்க்கவும்.

(புகைப்படம்—நன்றி—பிரிட்டிஷ் தகவல்துறை, சென்னை–1.)

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு,
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.